ISSN 1391-9504




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கோப்பிப் பயிர்ச்செய்கை

வர்த்தக சங்கத்தின் வருமானத்தை அதிகரிக்கும்பொருட்டு வேலை செய்வது போதாதென்று, பெற்ற இடங்களிலும் சங்கத்திற்குச் சொந்தமான இடங்களிலும் கோப்பிப் பயிர்ச்செய்கையை ஆரம்பித்தனர். ஒல்லாந்தர் முதலில் முதலிமார்களுக்கும் கோரளைகளுக்கும் விதானைமார்களுக்கும் கிராமசேவகர்ளுக்கும் மற்றும் ஏனைய கிராமவாசிகளுக்கும் அவர்கள் வேலை செய்வதற்காகப் பெற்றுக் கொண்ட இடங்களில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள கோப்பிக் கன்றுகளை வழங்கினர். அந்தக் கன்றுகளையும் குறிப்பிட்ட அளவே கொடுத்தனர்.

பயிர்ச்செய்கையாளர்களே, நோயுற்ற செடிகளையும் வளர்ச்சியடையாத செடிகளையும் கண்டுபிடித்து அகற்றிவிட வேண்டும். அது ஒரு நிபந்தனையாகும்.

அதேபோல், கோப்பிப் பயிர்ச்செய்கை மூலம் கிடைக்கும் வருமானத்தில் அரைவாசியை வர்த்தக சங்கத்திற்கு இலவசமாக வழங்கவும் பயிர்ச்செய்கையாளர்கள் இணங்கியிருந்தனர். எஞ்சிய அரைவாசியை பணம் கொடுத்து சங்கம் வாங்க ஏற்பாடாகி இருந்தது. அதே போல், தரிசு நிலத்தில் கிடைக்கும் அறுவடையில் பத்தில் ஒரு பங்கு சங்கம் வசமாகிவிடும். மிகுதி அறுவடையை சங்கம் பணம் கொடுத்து வாங்கும்.

இவ்வாறு கோப்பிப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள அன்று ஒல்லாந்தர் இடம் வழங்கியிருந்தனர். இம்முறையின்படி, 700,000 கோப்பிக் கன்றுகளை நட ஒல்லாந்தர் எதிர்பார்த்திருந்தனர். கோப்பித் திணைக்களம் ஒன்றையும் ஆரம்பித்தனர். அதற்குத் தலைவர் ஒருவரையும் நியமித்தனர். சங்கத்திற்கு சொந்தமான அறுவடைகளை சேகரிக்க வருகை தரும் தலைவரதும் அவரின் உதவியாளரதும் செலவினங்கள் மிக அதிகமாக இருந்தன. அச்செலவினை பயிர்ச் செய்கையாளர்களே ஏற்க வேண்டும். அது பெரும் நட்டத்தை ஏற்படுத்தியது. அதனால், அவர்கள் தமது பயிர்ச்செய்கையை கைவிட்டனர். இதனால், வர்த்தக சங்கம் தான் நியமித்த தலைவரையும் உதவியாளரையும் விலக்கிக்கொண்டது. அதன்பின் முன்பைவிட, அதிக அளவான கோப்பியை வர்த்தக சங்கத்தின் களஞ்சியங்களுக்கும் விவசாயிகள் கையளித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போஷாக்குள்ள உணவுப் பழக்கத்திற்கு மாணவர்களின் பங்களிப்பு அவசியம்

## யாழ்.மேலதிக சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு



"மனிதனின் உடல் ஆரோக்கியத்திற்கு போஷாக்குள்ள உணவும் சுகாதாரப் பழக்கவழக்கங்களும் அத்தியாவசியமானவை. இதற்கு மாணவர்களின் பங்களிப்பு முக்கியமானது" என்று யாழ். மேலதிக சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி செல்வி எஸ்.சிவ்ராணி தெரிவித்துள்ளார். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்ற சுகாதார விழிப்புணர்வுக் கண்காட்சி நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.


அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "ஆரோக்கியமான வாழ்வை ஏற்படுத்துவதில் மாணவர்கள்தான் முக்கிய அடிநாதமாக உள்ளனர். கண்காட்சிகள் மூலம் மாணவர்களுக்கு சுகாதாரப் பழக்கங்களைப் போதிப்பதால் அவை அவர்களின் மனதில் ஆழமாகப் பதியும். ஆகையால், பாடசாலைகளில் இவ்வாறான கண்காட்சிகளை நடத்துவது அதிக பயன்களைத் தரும்" என்றார். சங்கானை கோட்டப் பாடசாலை மாணவர்களும், மலேரியா ஒழிப்பு இயக்கத்தினரும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்தக் கண்காட்சியை ஏராளமானவர்கள் பார்வையிட்டனர்.






# அடுத்த வருடத்திற்கான பாடநூல்கள் 2 பிரிவுகளாக...

2011 ஆம் ஆண்டுக்குரிய இலவசப் பாடப்புத்தகங்கள் இரண்டு பிரிவுகளாக அச்சிட்டு விநியோகிக்கப்பட உள்ளதாக கல்வி வெளியீட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது. அதிக பக்கங்களையுடைய பாடநூல்கள் நிறைகூடிக் காணப்படுவதனால் அவற்றைக் கொண்டுசெல்வதில் மாணவர்கள் சிரமப்படுவதுடன், உடல் நலக் குறைபாடுகளுக்கும் ஆளாவதாகத் தெரிவிக்கப்பட்டு வந்ததையடுத்தே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



அதன்படி, இருநூறு பக்கங்களுக்கு அதிகமுள்ள பாடப்புத்தகங்கள் இரண்டு புத்தகங்களாக பிரிக்கப்பட்டு அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது. இதனால், இந்தப் புத்தகங்களைச் சுமந்துச் செல்வது மாணவர்களுக்கு இலகுவாக இருக்கும் என்றும் கருதப்படுகின்றது. இந்த வருட 3 ஆம் தவணை பாடசாலை விடுமுறை வழங்குவதற்கு முன்னதாகவே சகல பாடசாலை மாணவர்களுக்கும் உரியவாறு பாடநூல்கள் விநியோகிக்கப்பட்டு விடும் என்று கல்வி வெளியீட்டுத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

# பாடசாலைகளுக்கிடையே உறவுகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்



பாடசாலைகளுக்கிடையே நல்லுறவை வலுப்படுத்துமுகமாக 'பாசமிகு பாடசாலை' எனும் தொனிப்பொருளிலான புதிய திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக கல்வி அமைச்சின் சமாதான மற்றும் சமூக உறவுப் பிரிவு தெரிவித்துள்ளது.

மக்களிடையே நல்லுறவை வலுப்படுத்துவதற்கான ஆரம்ப இடம் பாடசாலையேயாகும். எனவே, பாடசாலைகளை மையமாக்கி அனைவரிடத்திலும் நற்புணர்வை ஏற்படுத்தும் வகையிலேயே இந்த நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கமைய, நாட்டிலுள்ள வெவ்வேறு மாகாணங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கிடையே சந்திப்புக்களை ஏற்படுத்தி கருத்துப் பரிமாற்றங்கள் கொண்ட நிகழ்ச்சித்திட்டமாகவே இது அமையும்.

மாணவர்களிடையே மட்டுமன்றி; அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர்களுக்கிடையேயும் இந்த நிகழ்வுகளின் மூலம் சமூக உறவுகளை வலுப்படுத்த முடியும் என்றும் ஏற்பாட்டாளர்கள் கருதுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# பாடசாலைகளில் போதைப்பொருள் தடுப்புக் குழு அமைப்பு

இலங்கையிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் போதைப் பொருள் தடுப்புக் குழுக்களை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிய வருகின்றது.



அண்மைக்காலமாக, சில பாடசாலைகளில் போதைப்பொருள் பாவனை அதிகரித்திருப்பது குறித்து பெரிதும் பேசப்பட்டு வந்தது. எனவே, இவற்றைத் தடுக்கும் நோக்கிலேயே விசேட குழுக்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

அதற்கமைய; பாடசாலை சிற்றுண்டிச் சாலைகள், வெளித் தொடர்பு, அநாமதேய நடமாட்டங்களையுடைய நபர்கள் போன்ற விடயங்களில் கண்காணிப்பை மேற்கொள்ளும் பொறுப்புக்கள் இந்தக் குழுக்களிடம் வழங்கப்படவுள்ளன.

பாடசாலை அதிபர், பழைய மாணவர் சங்க உறுப்பினர், மாணவர் தலைவர், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெறுவர். தினசரி இந்தக் குழு போதைப்பொருள் தொடர்பான சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன், மாணவர்களுக்கான விழிப்புணர்வுகளையும் வழங்கும்.

விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

30 நாட்கள் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
பாடநெறியில் இணையும் அனைவருக்கும் இவைகள் வழங்கப்படும்
பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773 - 123 523 க்கு SMS செய்யுங்கள்.
10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று Dialog Sim Card ஒன்று Video CD வழிகாட்டி புத்தகம் / அடையாள அட்டை Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எலலா மாவண/மாணவிகளுக்கும், வழங்கப்படும்.
எமது DIPLOMA சான்றிதழ் உங்கள் திறமையை வெளிக்காட்டுவதுடன் எதிர்கால உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பபை பெற மற்றும் நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மழைக்காலங்களில் வெள்ளப்பெருக்கினால் பாதிப்புக்குள்ளானோர் முகாம்களிலும் விசேட தங்குமிடங்களிலும் தங்க வைக்கப்படுகின்றனர். இவ்வாறு அனைவரும் ஒவ்வோர் இடங்களில் அதிகம் கூட்டமாகத் தங்க வைக்கப்படுவதனால் பலவேறு தொற்று நோய்களுக்கு உள்ளாகும் வாய்ப்புகள் ஏற்படுகின்றன. அத்துடன், மழையில் அதிகம் நனைவதனால் உடல் பலவீனமடையும் நிலைக்கும் உள்ளாகின்றனர். இதனால், பாதிப்படைந்தவர்கள் துரித கதியில் தொற்று நோய்களுக்குள்ளாகும் நிலை ஏற்படுகின்றது. எனவே, வெள்ளப் பொருக்கினால் இடம்பெயர்ந்து முகாம்களில் வசிப்பவர்களின் சுகாதார நிலைமைகள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியது மிக அவசியமாகும்.

# மழைக்கால தொற்றுநோய்கள் பரவாமல் தடுக்கலாம்

## குடிதண்ணீர் பாவனையின்போது....

அதிக மழையினால் ஏற்படும் வெள்ளப்பெருக்கு அனர்த்தத்தினால் கிணறு, ஆறு, ஏரிகள்,வாவிகள் என்பனவற்றில் அதிகமான கழிவுகள் சேர்கின்றன. இதனால், மழைக்காலங்களில் குடிதண்ணீர் பாவனையினால் அதிகளவான நோய்கள் பரவும். இதனால், நீரை நன்கு கொதிக்க வைத்தே அருந்த வேண்டும். இதனை வழக்கமாக்கிக் கொள்வது அவசியமாகும். குறிப்பாக மழைக்காலங்களில் இந்தப் பழக்கத்தைக் கடைப்பிடிப்பது நன்மையானதே. நீரைக் கொதிக்க வைப்பதனால் அதிலுள்ள கிருமிகள் அழிந்துவிடுவதுடன், தொற்றுநோய்கள் பரவும் வாய்ப்பும் குறைந்து விடுகின்றது. அத்துடன், வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட பகுதிகளில் உள்ள கிணறுகளைப் பயன்படுத்துவதற்கு முன்னர் அவற்றை நன்கு சுத்தப்படுத்துவது அவசியமாகும். வெள்ள நீரில் அடித்து வரப்பட்டு கிணறுகளில் தேங்கும் கழிவுகளை இதன்மூலம் அகற்றி விடலாம்.

## உணவு உட்கொள்ளும்போது...

மழைக்காலங்களில் உணவு வகைகள் குறித்து அதிக கவனம் செலுத்த வேண்டும். கடைகளில் விற்கப்படும் உணவு பானங்களைத் தவிர்த்து, வீடுகளில் தயாரிக்கப்படும் உணவு, பானங்களையே பயன்படுத்த வேண்டும். மழைக்காலங்களில் கீரைகளை உட்கொள்வதையும் தவிர்க்க வேண்டும். வெள்ளநீரில் உள்ள கிருமிகள் கீரைகளில் தங்கி விடக்கூடும். பொதுவாக, கீரைகள் சலட்டாக (Salad) லேசாக வேக வைத்து உண்ணப்படுவதனால் அவற்றில் உள்ள கிருமிகள் இலகுவில் அழியாது. இதனால், நன்கு சமைக்கப்பட்ட உணவு வகைகளையே உட்கொள்ள வேண்டும். பழங்கள், காய்கறிகளை நன்கு சுத்தப்படுத்தி நீரினால் கழுவிய பின்பே, உட்கொள்ள வேண்டும். அதேவேளை, மழைக்காலங்களில் வீதியோரங்களில் விற்கப்படும் உணவுகளைத் தவிர்ப்பதும் நல்லது.

## மழைக்கால தொற்று நோய்கள்

மழைக்காலங்களில் வயிற்றோட்டம், காய்ச்சல், மஞ்சள் காமாலை போன்ற நோய்கள் பரவலாகத் தொற்றக்கூடும். சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதன் ஊடாக, இந்நோய்கள் பரவுதலைக் கட்டுப்படுத்த முடியும்.

## மழையின் பின்னர் ஏற்படக்கூடிய நோய்கள்

பெருமழையின்போது, நீர் ஓரிடத்தில் தேங்கி நிற்க மாட்டாது. எனினும்,மழை நின்றபின் மழைநீர் ஆங்காங்கே தேங்கி நிற்கும். இந்நீரில் நுளம்புகள் பெருகும். இதனால், நுளம்பினால் ஏற்படக்கூடிய டெங்கு, மலேரியா போன்ற நோய்கள் பரவக்கூடும். இந்நோய்களில் இருந்து பாதுகாப்புப் பெற பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றுங்கள்.

✱ தேங்காய்ச் சிரட்டைகள், தயிர்ச் சட்டிகள் என்பனவற்றில் நீர் நிரம்பாதவாறு அவற்றை மறுபுறம் திருப்பி வையுங்கள். இல்லாவிட்டால் துண்டு துண்டாக உடைத்து விடுங்கள்.

✱ வீசப்படும் பாவனைக்கு உதவாத பிளாஸ்டிக் கோப்பைகள், டின்கள், இளநீர் கோம்பைகள் என்பனவற்றை நீர் நிரம்பாத வகையில் வையுங்கள். இல்லாவிடின், புதைத்து அல்லது எரித்து அழித்து விடுங்கள்.

✱ நீர் தேங்காத வகையில் டயர்களை வைத்திருங்கள். இல்லாவிட்டால் அவற்றில் மண்ணை நிரப்பி வையுங்கள். அவற்றில் நீர் தேங்காதபடி துளையிடுங்கள் அல்லது மண் நிரப்பி செடிகளை வளருங்கள்.

✱ பூச்சாடிகள், பூங்கா அலங்காரப் பொருட்கள், பறவைகள் குளிக்கும் தடாகங்கள் என்பனவற்றை வாரத்திற்கு ஒருமுறை நன்கு சுத்தப்படுத்துங்கள். இவற்றின் நீரை அடிக்கடி மாற்றுங்கள்.

✱ நீர் தேங்கும் தாவரங்கள் வளர்ப்பதைத் தவிர்த்து விடுங்கள்.

✱ நீர் சேமிக்கும் நீர்த்தாங்கிகள், பெரல்கள் என்பனவற்றை நன்கு மூடி வையுங்கள். வாரத்திற்கு ஒருமுறை அவற்றில் உள்ள நீரை வெளியேற்றி சுத்தப்படுத்துங்கள்.

✱ வாய்க்காலில் உள்ள கழிவுகளை அகற்றி நீர் நன்கு வழிந்தோட வழி செய்யுங்கள்.

✱ வெட்டப்படும் மூங்கில் மரங்களில் மண் நிரப்பி வையுங்கள்.

## மழைக்காலத்தின் முடிவில் ஏற்படும் எலிக்காய்ச்சல்

மழைக்கால முடிவில் ஏற்படும் மற்றுமொரு தொற்றுநோய்தான் எலிக்காய்ச்சலாகும். இந்நோய் 'லெப்டொஸ்பைரா' எனும் பக்றீரியாவினால் ஏற்படுகின்றது. இலங்கை முழுவதும் இந்நோயின் பரவல் உள்ளது. எனினும், மழைக்காலத்தின்பின், எலிக்காய்ச்சல் தொற்று அதிகமாக இருக்கும்.

நீர் நிரம்பியுள்ள இடங்களில் வயல்வெளிகளில் இந்தப் பக்றீரியா தேங்கியிருக்கும். இப்பகுதிகளில் விளையாடுதல், வயல் வெளிகளில் கையுறைகள், காலுறைகள் இன்றி வேலை செய்வது என்பனவற்றால் இப்பக்றீரியாத் தொற்று ஏற்படலாம். இந்நோயிலிருந்து பாதுகாப்புப் பெற சூழலை சுத்தமாக வைத்திருத்தல், கொதித்தாறிய நீரை அருந்துதல் என்பன சிறந்த தற்காப்பு முறைகளாகும்.

(இ)

## வெள்ளப்பெருக்கு அனர்த்தத்தின்போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள்



✱ வெள்ளப்பெருக்கு தொடர்பாக அறிந்தவுடன் உயர்வான இடங்களுக்கு அல்லது உயரமான கட்டடங்களுக்குச் சென்று விடுங்கள்.



✱ பாதுகாப்பான இடங்களுக்கு செல்லும் போது முக்கியமான ஆவணங்கள் (சான்றிதழ்கள் வீட்டுப் பத்திரங்கள்) பணம், நகைகள் என்பனவற்றை எடுத்துச் சென்று விடுங்கள்.

✱ அவசரத் தேவைக்கு குடிதண்ணீர் போத்தல், முதலுதவிப் பொருட்கள், உலர் உணவுகள் (பிஸ்கட், பொதி செய்யப்பட்ட உணவுகள்), போர்வைகள், பற்றரியில் இயங்கும் வானொலி டோர்ச் என்பனவற்றை பை ஒன்றினுள் தயாராக வைத்திருங்கள்.



✱ வெள்ளம் ஏற்பட்டிருக்கும் போது நீரில் விளையாடுவது, நீந்துவது போன்ற விளையாட்டுக்களில் ஈடுபடுவதைத் தவிர்த்து விடுங்கள்.

✱ உங்களுக்கு நீச்சல் தெரியாவிட்டால் அடுத்தவர்களைக் காப்பாற்றச் செல்லாதீர்கள். அதற்கான உதவிகளை மட்டும் செய்யுங்கள்.

✱ தொண்டுப் பணியில் ஈடுபடும் ஊழியர்களுக்கு உதவி செய்யுங்கள்.

✱ வீட்டின் கதவு, ஜன்னல்களை நன்கு திறந்து வையுங்கள். இதனால், வெள்ளநீர் அடித்துச் செல்லப்பட்டு வீட்டுச் சுவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் குறைவடையும்.



✱ வெள்ளப் பெருக்கு ஏற்பட்டால் கிணறுகள், ஆழ் கிணறுகள் என்பன நீரினால் நிரம்பி விடுகின்றன. இதனால், இவற்றால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களில் இருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.



✱ வெள்ளப் பாதிப்புக்குள்ளாகி அறுந்து விழுந்திருக்கும் மின்விளக்குக் கம்பிகளுக்கு அருகில் செல்ல வேண்டாம்.



✱ அதிக மழையினால் மண்சரிவுகள் ஏற்படக்கூடும். இதனால், மண்சரிவு அபாயம் உள்ள இடங்களில் இருந்து உடனடியாகச் சென்று விடுங்கள். (சேற்று நீரூற்றுத் தோன்றுதல், தரை கீழிறங்குதல், வீட்டுச் சுவரில் வெடிப்புகள் தோன்றல் என்பன மண்சரிவு ஏற்படப் போவதற்கான அடையாளமாகும்)



✱ மழைக்காலத்தில் மின்னல் தாக்குதலும் ஏற்படக்கூடும். இந்தப் பாதிப்புகளில் இருந்து பாதுகாப்புப் பெறவும் நடவடிக்கை எடுங்கள்.

✱ வானிலை அவதான நிலையத்தினால் விடுக்கப்படும் அறிவித்தல்கள் குறித்து அவதானத்துடன் இருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு மனிதனுக்கு உணவு எவ்வளவு அவசியமோ, அது போன்று உறக்கமும் அவசியமாகின்றது. ஆனால், அது அளவோடு இருக்க வேண்டும். இல்லையேல், உறக்கமானது மனித செயற்பாடுகளைத் தளர்த்திவிடும்.

# கற்றலில் உறக்கத்தின் நிலை



## மாணவர்களுக்கு நித்திரையின் அவசியம்

மனிதனைப் போன்ற சிக்கலான உயிரிகள் குறைந்த அளவு நேரமாவது நித்திரை செய்ய வேண்டும்.

அதிலும் படிக்கும் மாணவர்கள் கட்டாயம் நித்திரை செய்ய வேண்டும். நித்திரைதான் மூளையின் ஓய்வு நேரமாகும். பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் தமது கல்விச் செயற்பாட்டில் அதிகம் மூளையைப் பயன்படுத்துகின்றனர். அவர்களின் அனைத்து நடவடிக்கைகளும் மூளையை மையமாகக்கொண்டே இடம்பெறுகின்றன. எனவே, அனைத்து வேலைகளையும் செய்யும் மூளைக்கு கட்டாயம் ஓய்வு கொடுக்க வேண்டும். இல்லையேல், மூளைக்கு அதன் செயற்பாடுகளை செவ்வனே செய்ய முடியாத நிலை ஏற்படும்.

ஒரு மனிதன் நீண்ட நேரத்திற்கு நித்திரை செய்யாமல் இருந்தால் அல்லது விழிப்பு நிலையிலிருந்தால் களைப்பின் உணர்ச்சிகள், வறட்சி உணர்ச்சி, கண்ணிமைகளில் பளு, கண்களுக்குக் கீழ் கருமை நிறம் தோன்றல் முதலிய பலவீனங்கள் தோன்றுகின்றன. ஒரு மனிதன் ஒரு நாளைக்கு எட்டு மணி நேரம் நித்திரை செய்ய வேண்டும். தூக்கமும் விழிப்பு நிலையுமே நல்வாழ்வையும் உடல் நலத்தையும் தீர்மானிக்க வல்ல கருவிகளாகும்.

**கல்வி**

**முகாமைத்துவம் - 30**

**கற்றலுக்கான ஆலோசனைகள்**

## அதிக நேர உறக்கமும் பாதிப்பும்

ஒரு மாணவன் அதிக நேரம் உறங்குவதால் அவனது மூளை குழப்பகரமானதாக இருக்கும். எந்தச் செயலிலும் அவனுக்கு ஈடுபாடு இருக்காது. எந்தவொரு விடயத்திலும் தீர்மானம் எடுக்க முடியாத சோர்வான நிலையே காணப்படும். இதனால், மாணவர்கள் தாம் நித்திரை கொள்ளும் நேரத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

## நீண்ட நேரம் விழித்திருத்தலும் பாதிப்பும்

சில மாணவர்களை நோக்கினால், நித்திரை கொள்ளாமல் அதிக நேரம் விழித்திருந்து பாட விடயங்களைக் கற்பார்கள். இந்த நிலையை பரீட்சைக் காலங்களில் அதிகமாக அவதானிக்கக்கூடியதாக இருக்கும். எனினும், இவ்வாறு தொடர்ச்சியாக விழித்திருந்து கற்கும் வேளையில், மனதில் கற்ற பாடங்களை நிலைநிறுத்த முடியாது. அதுமட்டுமன்றி, பரீட்சை மண்டபத்தில் கற்றதை நினைவுபடுத்த முடியாமை, தூக்கம் வரல், பரீட்சையை எழுத முடியாமை போன்ற பல அசௌகரியங்கள் ஏற்படும்.



இன்றைய நிலையில், படிக்கும் மாணவர்களில் அதிகமானோர் உறக்கத்தை ஒத்தி வைக்கின்றனர். நாம் நள்ளிரவில் உறங்கும் உறக்கத்தின்போதுதான் பகல் காலங்களில் நாம் படிக்கும் விடயங்கள் மனதில் நன்கு பதிந்து விடுகின்றன. 'ஒழுங்கான தூக்கத்தைப் பெறாத மாணவர்கள் பாடசாலையில் கற்றல் விடயங்களில் தெளிவான பலவீனத்தைக் (Weakness) காட்டுகின்றனர்' என அமெரிக்காவில் நடாத்தப்பட்ட புதிய ஆராய்ச்சி ஒன்றினூடாக தெரியவந்துள்ளது.

இந்தப் பரிசோதனைக்கு பாடசாலையில் கல்வியில் பின்னடைவைக் காட்டிய, 300 மாணவர்கள் உட்படுத்தப்பட்டனர். அதில் அதிகமானோர் Sleep Apnia எனும் நோயால் பாதிக்கப்பட்டவர்களாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. உறக்கத்திற்குத் தடை ஏற்படல், உறக்கத்தின்போது மூச்சுத்திணறல் என்பன இந்நோயின் அறிகுறிகளாகும். இதைச் சத்திர சிகிச்சை ஒன்றின் மூலம் சீர்படுத்தலாம் என இந்தப் பரிசோதனையை மேற்கொண்ட உறக்கம் சம்பந்தமான வைத்திய நிபுணர் David Gosen என்பவர் தெரிவித்துள்ளார்.

எனவே, கற்றலுக்குத் தூக்கம் அத்தியாவசியமானதே. உறக்கத்தில் கவனம் செலுத்தாவிடின், அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். அதேவேளை, நீண்ட நேர உறக்கமும் கற்றலைப் பாதிக்கும். ஆகவே, இரவில் கற்பதற்கான நேரத்தை ஒதுக்கும்போது, ஒரு மாணவனுக்கு அவசியமான சராசரி உறக்கத்தைப் பலி கொடுக்காதவாறு ஒழுங்குபடுத்திக் கொள்வது மிக அவசியமானதாகும்.

(தொடரும்)

**எம்.ஏ.எஃப். சப்ரானா**



# 2010, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மிதுனா நடேசமுதலி, 170 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



கமு/அல்-மனார் மத்.கல்லூரியில் கல்வி பயிலும் முஹம்மட் நிப்லி, 146 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



ஒஹீபா அப்ஷர், 146 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், கமு/அல்-மனார் மத்.கல்லூரி மாணவியாவார்.



கமு/அல்-மனார் மத்.கல்லூரியில் கல்வி கற்கும் பெஃப்லின் ஜயூப், 144 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



கமு/அல்-மனார் மத்.கல்லூரியில் கல்வி கற்கும் வை.அய்மன், 144 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



க/குருந்துகொல்லை மத். கல்லூரியில் கல்வி பயிலும் அப்ரா அமானுல்லாஹ், 169 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அமானுல்லாஹ்-ரிஸானா தம்பதியரின் புதல்வியாவார்.



சிலா/புனித பெர்ணதேத் கல்லூரியில் கல்வி பயிலும் ஆர்.தினேஷ்குமார், 147 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், இராஜேந்திரகுமார்-மனோன்மணி தம்பதியரின் புதல்வராவார்.



சிலா/புனித பெர்ணதேத் கல்லூரியில் கல்வி பயிலும் என்.நிதர்ஷன், 145 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நாகேந்திரன்-தயானிதி தம்பதியரின் புதல்வராவார்.



கொத்/அல்-அரபா முஸ்லிம் வித்தியாலய மாணவன் எம்.ரஷாத், 181 புள்ளிகளைப் பெற்று, நுவரெலியா மாவட்டத்தில் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார். இவர், எம்.நியாஸ்-எஃப்.ரிஸ்வானா தம்பதியரின் புதல்வராவார்.



கோடேகொட மு.வித்தியாலயத்தில் கல்வி பயிலும் எம்.சமீல், 152 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.சியாம்-சர்மிலா ஜெஸ்மின் தம்பதியரின் புதல்வராவார்.



வெல்பொதுவெவ மகா வித்தியாலய மாணவி எஃப். ஹஸ்பியா, 154 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.இல்லியாஸ்-உம்மு ஸாஹிரா தம்பதியரின் புதல்வியாவார்.



பாத்திமா அஃப்ரா, 164 புள்ளிகளைப் பெற்றுள்ளார். எம்.அமீன்-நதீரா தம்பதியரின் புதல்வியான இவர், வெல்பொதுவெவ மகா வித்தியாலய மாணவியாவார்.



விஜிதன் ஹர்ஷாந், 181 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரி மாணவராவார்.



கண்டி புனித அந்தோனியார் ஆண்கள் கல்லூரியில் கல்வி கற்கும் ப.மதுஷன், 170 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், பரமநாதன்-பிரமிளாராணி தம்பதியரின் புதல்வராவார்.




தி/சிராஜ் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் எம்.இனாஸ், 161 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், கபிபுள்ளா-பௌசுனா தம்பதியரின் புதல்வராவார்.



***தலாத்துஓய த.ம.வித்தியாலயத்திலிருந்து சித்தியடைந்த மாணவர்களான சி.சுரேஸ்கோபி (171 புள்ளிகள்), ட.கோகிலா (163 புள்ளிகள்) ஆகியோர் தங்கள் வகுப்பாசிரியருடன் காணப்படுகின்றனர்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மீன்கள் வியப்பா



ட்ரவுட்

**உலகில் 21,000 இற்கும் மேற்பட்ட மீன் இனங்கள் இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இன்னும் கண்டுபிடிக்கப்படாத, எத்தனையோ இன மீன்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மீன்களை அவற்றின் தன்மைகளைக் கொண்டு மூன்று பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். தாடைகள் இல்லாத உணவை உறிஞ்சிக் குடிக்கக்கூடிய 'லாம்ரே'. வளையும் தன்மைகொண்ட மென்மையான முதுகெலும்புடைய சுறாக்கள். மூன்றாவதும் அதிக எண்ணிக்கை கொண்டதுமான உறுதியான முதுகெலும்புடைய மீன்கள் என ஒவ்வொரு மீனும் உருவத்திலும் நிறத்திலும் நிறையிலும் வேறுபடுகின்றன.**

## மிகப்பெரிய மீன்



திமிங்கிலச் சுறாதான் உலகின் மிகப் பெரிய மீன் இனமாகும். இதன் நீளம் சுமார் 59 அடியாகும். இதன் நிறையோ, 15 தொன் வரை இருக்கும். மிதக்கும் மிதவை உயிரினங்கள்தான் திமிங்கிலச் சுறாவின் உணவாகும்.

## கண்களைத் திறந்தபடி தூங்கும் மீன்கள்

மீன்கள் கண்களைத் திறந்தபடியே தூங்குகின்றன. இதற்குக் காரணம் மீன்களுக்கு இமைகள் கிடையாது என்பதாகும். தூங்கும்போது குளம், ஆறு, கடல், அக்வேரியம் போன்ற எந்த இடமாக இருந்தாலும் அடிப்பகுதிக்குச் சென்று விடுகின்றன. தூங்கும்போது மீன்கள் நீந்துவதை நிறுத்திவிட்டு, ஒரே இடத்தில் சுவாசித்துக் கொண்டு இருக்கின்றன.

## நடக்கும் மீன்கள்



உலகில் ஒரே ஒரு இன மீன் மட்டும் நீந்துவதில்லை. இவை நீருக்கு அடியில் இருக்கும் மணல் மீது நடந்து செல்கின்றன. இந்தவகை மீன்களை வோக்கிங் பெட் ஃபிஷ் (Walking Bat Fish) என அழைக்கின்றனர். இவற்றின் துடுப்பு கால்களைப் போல் தட்டையாக அமைந்திருக்கின்றது. எனவே, இவை நீந்தாமல் நடந்தே செல்கின்றன.

## ஆபத்துக்கள் நிறைந்த சுறா


குறிப்பிட்ட சில சிறிய இன சுறாக்களைத் தவிர, ஏனைய அனைத்துச் சுறாக்களும் மிகவும் ஆபத்தானவை. அதிலும் பெரிய வெள்ளைச் சுறா மிக மிக ஆபத்தானது. அவுஸ்திரேலியாவில் பலர் இதனால் தாக்கப்பட்டுள்ளனர். இவை கடிக்கவோ, தாக்கவோ கூடத்தேவையில்லை. நம் உடல் மீது பட்டாலே போதும். பயங்கரமான காயங்கள் ஏற்பட்டுவிடும். இச்சுறாக்களின் தோல் சொரசொரப்பான பொருந்தொகையான முற்களால் ஆனது.

## மீன்கள் வசிக்காத இடங்கள்

பனியால் முற்றிலும் உறைந்துபோன இடங்களில் மீன்களால் வசிக்க இயலாது. ஆனால், சில குளங்கள், ஏரிகளில் மேல் பகுதி பனிக்கட்டியாக இருந்தாலும் கீழே ஆழத்தில் உருகித் தண்ணீராக இருக்கும். இதுபோன்ற இடங்களில் மீன்களால் வசிக்க முடியும். பொதுவாக ஏரி, குளங்களில் மேற்பகுதி எப்படி இருந்தாலும் அடிப்பகுதிகளில் மிதமான வெப்பநிலை நிலவுவதால் மீன்கள் வாழக்கூடியதாக இருக்கின்றன.

## வேகமாக நீந்தும் மீன்

மீன்களில் மிகவும் வேகமாக நீந்தக்கூடியது 'செயில் ஃபிஷ்' என்னும் மீன் இனம்தான். இது சிலநேரங்களில் மணிக்கு 60 மைல் வேகத்தில்



கூட நீந்தும். இன்னும் சில மீன்கள் மணிக்கு 30 முதல் 45 மைல் வேகத்தில் நீந்துகின்றன. பெரும்பாலான மீன்கள் மிகவும் மெதுவாகவே நீந்தக்கூடியவை. 'ட்ரவுட்' என்ற நன்னீர்வகை மீன் மணிக்கு 4 மைல் வேகத்தில் நீந்துகின்றது.

## அமேசனுக்கு உரித்தான 'பிரன்ஹா'

சுறாக்களைப் போன்று மற்றொரு ஆபத்து நிறைந்த மீன் 'பிரன்ஹா'. இது உருவத்தில் சிறியது. ஆனால், மிகவும் கூர்மையான பற்



களைக் கொண்டது. ஆயிரக்கணக்கான பிரன்ஹாக்கள் கூட்டமாகச் சென்று பெரிய மீன்களைத் தாக்குகின்றன. சில நிமிடங்களில் பெரிய மீன் அல்லது பிராணியின் ஒரு சிறிய தசைப் பகுதியைக் கூட மிச்சம் வைக்காமல் தமது உணவாக்கிக் கொள்கின்றன. எஞ்சியிருப்பதோ, எலும்புகள் மாத்திரமே, இந்தப் பிரன்ஹாக்கள் தென் அமெரிக்காவின் 'அமேசன்' நதியில் மாத்திரமே இருக்கின்றன.

## மீன்கள் எவ்வாறு சுவாசிக்கின்றன?

உயிரினங்கள் சுவாசிக்க ஒட்சிசன் அவசியம். காற்றிலும் நீரிலும் இருக்கும் ஒட்சிசனை எடுத்துக்கொள்ளும் உயிரினங்கள் நுரையீரல் மூலம் சுவாசிக்கின்றன.


## 'ரெமோரா' மீன்கள்



'ரெமோரா' என்னும் மீன் இனங்கள் எந்நேரமும் திருக்கை மீன்களுடன் சுற்றித் திரியும். இவைதான் திருக்கையைச் சுத்தப்படுத்தும் க்ளீனர்கள். திருக்கையின் உடலில் இருக்கும் இறந்த செல்கள், வாய்ப்பகுதியில் இருக்கும் உணவுப் பொருட்கள் போன்றவற்றை உணவாக்கிக் கொள்கின்றன, இதன் மூலம் தமது உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றன.

## நீர் பாய்ச்சும் மீன்

'ஆர்ச்சர் ஃபிஷ்' எனும் ஒருவகை மீன் நீரின் மேல் பகுதிக்கு வந்து கரையை நோக்கி நீந்தி வரும். அங்கு கரைகளில் உள்ள தாவரங்களின் மீது வசிக்கும் பூச்சிகளின் மேல் நீரைப் பீய்ச்சி அடிக்கும்.அதனால், பூச்சிகள் நீரில் விழ விரைந்து சென்று அவற்றை உணவாக்கிக் கொள்ளும்.



## பின்னோக்கி நீந்தும் மீன்

'ஈல்' எனும் ஒரு வகை மீன், பின்னோக்கி நீந்தும் ஒரே ஒரு மீன் இனமாகும். இந்த 'ஈல்' மீன்களின் உடல் கண்ணாடி போல் இருக்கும்.



எலும்புகள் முழுவதும் வெளியில் தெரியும். ஈல் குஞ்சுகள் வளர வளர சிறிது சிறிதாக உருமாறி பெற்றோரின் உருவத்திற்கு வரும்.

## தரையில் வாழும் மீன்கள்

பொதுவாக, மீன்கள் நீரில் வாழ்ந்தாலும் நீருக்கு வெளியே வசிக்கக்கூடிய மீன்களும் உள்ளன. அவை சில மணிநேரம் ஏன் சில நாட்கள், சில வருடங்கள்கூட தரையில் வசிக்கின்றன. அந்தவகையில், 'மட்ஸ்கிப்பர்' எனும் மீன் இனம் நிலத்தில் துள்ளிச் செல்லக்கூடியது. சில மீன்க்ள் செவுள்களில் சிறப்பு அமைப்புண்டு. இதன் மூலம் அவற்றுக்கு நீரிலும் நிலத்திலும் சுவாசிக்க முடிகின்றது.

வேறு சில மீன்கள் செவுள் மற்றும் நுரையீரலைப் பெற்றிருக்கின்றன. இதில் 'லங் ஃபிஷ்' என்றொரு மீன் வகை விசேடமானது.

வெயில் காலத்தில் நீர் வற்றும்போது 'லங் ஃபிஷ்' மண்ணைப் பந்துபோல் உருட்டி அதற்குள் சென்று தங்கிவிடுகிறது. மண் உருண்டைக்குள் சிறிய ஓட்டை மட்டும் இருக்கும். இதன் மூலம் காற்றைச் சுவாசித்துக்கொள்கின்றது.



இவ்வாறு பல மாதங்கள், வருடங்கள் தூக்க நிலையில் அவற்றால் இருக்க முடியும். மழைக் காலம் வந்ததும் தூக்கத்திலிருந்து விழித்து நீருக்குள் வசிக்கத் தயாராகிவிடும். இத்தகைய மீன் வகைகள் 'அமேசன்' காடுகளில் உண்டு.

## ஒளிரும் மீன்கள்

அறுநூறு அடிக்கு மேற்பட்ட ஆழ்கடலில் மிகவும் இருள் சூழ்ந்திருக்கும். சூரியஒளி சிறிதேனும் இருக்காது. நீர் குளிர்ச்சியாக இருக்கும். ஆனால், அங்கும் மீன்கள் வாழ்கின்றன. பெரும்பாலான மீன்கள் பல்வேறு நிறங்களிலும் அச்சம் தரும் உருவ அமைப்புகளுடனும் காணப்படுகின்றன. ஆழ்கடல் மீன்களில் ஒவ்வோர் இனத்துக்கும் ஒவ்வொரு விதத்தில் ஒளி உமிழும் உறுப்புக்கள் அமைந்துள்ளன. இந்த ஒளி[illegible] மூலம் அவற்றால் இரையைக் கண்டறிய முடிகிறது. இரையைத் தேடிப் போகாமல் இரையே வெளிச்சத்தைப் பார்த்து அருகில் வந்துவிடும். தமக்கு நேரப்போகும் ஆபத்தை அறியாமல் வெளிச்சத்தை நோக்கி வரும் மீன்கள் சட்டென்று இந்த மீன்களுக்கு இரையாகி விடுகின்றன.

## அடைக்கலம் தேடும் மீன்

'க்ளான் ஃபிஷ்' என்னும் மீன் இனம் ஆபத்து வரும்போது, எதிரியுடன் போராடும் பழக்கம் இல்லாதது. மாறாக, வேகமாகத் தப்பிச் சென்று விடுவதும் இல்லை. ஆபத்தை உணர்ந்த அடுத்த விநாடி, நேராக கடல் பஞ்சுகள் இருக்கும் இடம் நோக்கி விரைகின்றன. கடல் பஞ்சுகளும் அவற்றுக்கு அடைக்கலம் கொடுக்கின்றன. துரத்தி வரும் அதன் எதிரி கடல் பஞ்சைக் கண்டதும் அதிர்ச்சி அடைந்து நின்றுவிடும். கடல் பஞ்சு விஷம் நிறைந்ததால் அதற்கு அஞ்சி வந்த வழியே திரும்பிச் சென்றுவிடும்.

## உருவம் மாறும் மீன்



'பஃபர்' என்னும் இன மீன் சாதாரணமாக, ஏனைய மீன்களைப் போலவே நீந்தியபடி இருக்கும். ஆனால், திடீரென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ி பற்றிய
# ...ன தகவல்கள்



ஆபத்து வந்தால் அல்லது எதிரியைக் கண்டால் உடனே நீரைக் குடித்துப் பல மடங்கு பெரிதாகிவிடும். இதனால், பெரிய பந்து போல் உடல் மாறிவிடும். உடலைச் சுற்றி முட்கள் நீட்டிக்கொண்டிருக்கும். இக்காட்சியைக் கண்ட எதிரி பயந்து ஓடிவிடும்.

## சுவை அரும்புகள் நிறைந்த மீன்

மீன்களின் சுவை அரும்புகள் அதன் வாயில் மட்டுமன்றி, உடலின் பல பகுதிகளிலும் காணப்படுவது ஒரு வியப்பான விடயம்தான். பொதுவாக, அனைத்து மீன்களுக்கும் வாய் மற்றும் வாய்க்கு வெளியேயுள்ள பகுதிகளில் சுவை அரும்புகள் காணப்படுகின்றன. இதன்மூலம் அவற்றால் இலகுவாக இரையை அடையாளம் காணமுடிகிறது.

மீன்களுக்கு வெளிப்புறக்காதுகள் கிடையாது. நீரில் வரும் ஒலி அலைகளை மீனின் உடல் பெற்றுக்கொண்டு, அதற்கு ஏற்றாற்போல் அது செயற்படுகின்றது.

## புத்திசாலி மீன்கள்

டொல்ஃபின் மீன் ஒரு பாலூட்டியாகும். திமிங்கிலத்தின் உறவு வகையைச் சேர்ந்தது.



ஆனால், மிகவும் சாதுவானது. புத்திசாலித்தனமானதொரு மீன்வகை. மனிதர்களிடம் மிக அன்பாகப் பழகக் கூடியவை. நாம் ஏதாவது கற்றுக்கொடுத்தால் நன்கு புரிந்துகொண்டு அதனை செய்யக்கூடிய ஆற்றல் நிறைந்தவை.

## பறக்கும் மீன்கள்

பறக்கும் மீன்கள் என ஒருவகை மீன் உண்டு. பெயர் அவ்வாறு அமைந்தபோதும் உண்மையில் அவை பறப்பதில்லை. ஆபத்து நேரும் போது, இந்த மீன் நீருக்கு அடியில் இருந்து மேலே வரும். சட்டென நீருக்கு வெளியே தலையை நீட்டி, நீண்ட துடுப்பையும் வாலையும் பயன்படுத்தி ஓர் அழுத்தம் கொடுத்து வேகமாகப் பாயும். இத்தகைய பாய்ச்சல் சில நேரங்களில் 300 அடி தூரமாகக்கூட இருக்கும். இதைப் பார்க்கும்போது, மீன் பறப்பது போல் இருக்கும்.

## மின்சார மீன்கள்

இதுவரை, உலகில் 348 இன மின்சார மீன்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய உறுப்புகள் இந்த மீன்களிடம் இருக்கின்றன. இந்த மின்சாரம் எதிரியைத் தாக்கவோ, இரையைக் கொன்று



உணவாக்கிக் கொள்ளவோ பயன்படுகின்றது. சில மீன்கள் அதிக அளவு மின்சாரத்தை வெளியிடுகின்றன. சிலவகை மீன்கள் குறைந்த அளவே மின்சாரத்தை வெளிப்படுத்துகின்றன. குறைவான மின்சாரம் இரையைப் பிடிக்க மாத்திரமே பயன்படுகின்றது.

-இரஞ்சித் ஜெயகர்


ஆங்கிலத்தில் எழுத, பேச, வாசிக்க
45 நாட்களில் வீட்டிலிருந்தே கற்கலாம்

ஆங்கிலத்தில் அழகாக பேச வேண்டும் என்பது அனைவரினதும் ஆசை. ஆனால் வீட்டை விட்டு வெளியே சென்று கற்க நேரம் இல்லாத மாணவர்கள், இல்லத்தரசிகள், தொழில் புரிபவர்கள் தொழில் வாய்ப்பை எதிர்பார்த்து இருப்பவர்கள் இளைஞர்கள் யுவதிகள் அனைவருக்கும் வீட்டிலிருந்தே ஆங்கிலம் கற்க அறிமுகமாகிறது *Nithya's English Home study Pack.* ஆங்கில கற்கை பொதி.

English Home Study Pack
ஒன்றில் அடங்குபவை.

ஆங்கில பேச்சு பயிற்சி புத்தகங்கள் (ஆங்கில பேச்சு பயிற்சி, இலக்கணம், கவிதைகள் குறுக்கெழுத்து போட்டி, கடிதம் எழுதுதல், சிறுகதைகள், கட்டுரைகள் உள்ளடக்கிய புத்தகம்) 12
The Necklace Story Book. த நெக்லஸ் சிறுகதை புத்தகம். 1
1 ஆங்கில பேச்சு பயிற்சி Video Cd 1
1 ஆங்கில வாசிப்பு பயிற்சி Audiio Cd 1
3 ஆங்கில பேச்சு பயிற்சி Audiio Cd 3
Audio Cd Guide Books -2
Cdகளின் வழி காட்டி புத்தகங்கள். Cd களை போட்டு கேட்கும் போது கையில் வைத்திருக்க வேண்டும்.
அழகிய Bag - Answer Sheets

பாடநெறி முடிவில் Cerficate In English சான்றிதழ் வழங்கப்படும்.

13 பாடப் புத்தகங்களிலும் காணப்படும் பயிற்சிகளுக்கு விடைகளை எழுதி அனுப்ப வேண்டும். அவைகளை பிழை திருத்தி உங்களுக்கு மீண்டும் அனுப்பி வைக்கப்படும். இதன் மூலம் நீங்கள் பிழைகளை திருத்திக் கொள்ளலாம்.

Home Study Pack
ஒன்றை பெறுவது எப்படி ?

நீங்கள் Study Pack ஐ பெற விரும்பின் பின்வருமாறு உங்கள் விபரங்களை SMS செய்யுங்கள். VS -இடைவெளி உங்கள் பெயர், முகவரி, வயது, தொலைபேசி இலக்கம் Study pack அருகே இருக்கும் தபால் கந்தோருக்கு அனுப்பி வைக்கப்படும். பின்னர் ரூ 1900/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

0777-806 606 SMS செய்யுங்கள்.

அல்லது அருகே இருக்கும் பின்வரும் வங்கி ஒன்றில் M.H.M.Ramzan Director Jei என்ற பெயரில் ரூ 1700/- சலுத்தி வீட்டு உங்கள் விபரங்களை 0814-92 91 93 இலக்கத்திற்கு அறிவிக்கவும்.

Bank Of Ceylon - 9956240 - Com- Bank - 80-400-52 644
Peoples Bank - 0032- 0014- 75-625-20
HNB- 4157-3850-2904-0001

Study Pack வீட்டுக்கே அனுப்பி வைக்கப்படும். தபால் நிலையத்திற்கு செல்ல தேவை இல்லை.




வெளிநாடுகளில் உயர்கல்வி பெற இலகு வழி
JEI INSTITUTE, P.O.BOX.119 KANDY.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு நாடு

# லிபியா




தேசிய இலச்சினை

ட்ரிபோலி நகரின் ஒருபக்கத் தோற்றம்



**அரசு:** ஜமாஹிரியா (மக்களின் நாடு).

**தேசிய பெயர்:** அல்-ஜமாஹிரியாஹ் அல் அரபிய்யாஹ் அல் லிபியாஹ் அஷ் ஷாபியா அல் இஸ்திரகிய்யாஹ் அல் உஸ்மா (Great Socialist People's Libyan Arab Jamahiriya).

**சுதந்திரம்:** இத்தாலியிடமிருந்து 1947 பெப்ரவரி 10; ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பின்கீழ் ஐக்கிய ராச்சியத்திடமிருந்தும் பிரான்சிடமிருந்தும் காவல் அகற்றப்பட்டது 1951 டிசம்பர் 24.

**தேசிய தினம்:** புரட்சித் தினமாகிய செப்டெம்பர் 1.

**சகோதரத்துவ தலைமையும் புரட்சி வழிகாட்டியுமாகத் திகழ்பவர்** (1969): மொஹமட் அல்-கடாஃபி.

**பிரதமர்:** அல் பக்தாதி அல் மஹ்முதி.

## புவியியல்

ஆபிரிக்காவின் செல்வந்த நாடுகளில் ஒன்றாகிய லிபியா, புரட்சி வீரர் ஓமர் முக்தாரின் தாயகமாகும். நாட்டின் பெரும்பகுதி பாலைவனமாகும். இதன் **கிழக்கு**-எகிப்து, சூடான்; **தெற்கு**-சாட் மற்றும் நைகர்; **மேற்கு**-அல்ஜீரியா, டியுனீஷியா ஆகிய நாடுகள் எல்லைகளாக அமைந்துள்ளன.

**மொத்தப் பரப்பு:** 679,358 ச.மைல் (1,759,540 ச.கி.மீ).

**மக்கள் தொகை** (2010): 6,461,454.

**தலைநகரமும் பெரிய நகரமும்:** ட்ரிபோலி;

**ஏனைய பெரிய நகரம்:** பென்காசி.

**நாணயம்:** லிபியன் தினார்.

**மொழிகள்:** அரபு, இத்தாலி, ஆங்கிலம் (பொதுவாக பெரிய நகரங்களில் மாத்திரம் பயன்பாட்டில் உள்ளது).

**இனக்குழுக்கள்:** பெர்பர் மற்றும் அரேபியர் 97%; கிரேக்கர், மோல்டீஸ், இத்தாலியர், எகிப்தியர், பாகிஸ்தானியர், இந்தியர், துருக்கியர், டியூனீசியர்.

**சமயம்:** இஸ்லாம் (சுன்னி) 97%.

**எழுத்தறிவு** (2003): 83%.

**இணையத்தளக் குறியீடு:** .ly

**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** 218

**தேசிய கீதம்**

Allahu Akbar
Allahu Akbar
Allahu Akbar Fauqua
Kaidi L'mutadi
Allahu Lilmazlumi
Hairumu'ayyidi…என

ஆரம்பமாகின்றது.







## வரலாறு

லிபியாவில் முதன்முதலாக குடியேறிய மக்கள் பெர்பர் இனத்தினராவர். கி.மு 7 ஆம் நூற்றாண்டில் பீனிசியர்கள் லிபியாவின் கிழக்குப் பகுதியில் குடியேற்றங்களை அமைத்தனர். அவ்வாறு அமைத்த தமது குடியேற்றத்திற்கு 'சைரனைக்கா' எனப் பெயர் வைத்தனர். மேற்குப் பகுதியில் கிரேக்கர்கள் குடியேற்றங்களை அமைத்தனர். அதனை 'ட்ரிபோலிடானியா' என அழைத்தனர். பின்னர் கி.மு.46 முதல் கி.பி.642 வரை உரோமானியப் பேரரசர்களின் ஆட்சியின்கீழ் இருந்தது. அதன் பின்னர், அரேபிய படையினரால் கைப்பற்றப்பட்டது. 16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஒட்டோமன் பேரரசின் பகுதிகளாகின.



நாட்டின் தலைவர்



பிரதமர்

1911 இல் இப்பிரதேசத்தின்மீது இத்தாலி படையெடுத்தது. பின் ட்ரிபோலிடானியா மற்றும் சைரனைக்கா ஆகிய இரண்டையும் இணைத்து 1934 இல் 'லிபியா' என்ற பெயரில் குடியேற்றம் அமைக்கப்பட்டது. 1951 டிசம்பர் 24 ஆம் திகதி ஐ.நா. தலையீட்டுடன் சுதந்திரம் வழங்கப்பட்டது. 1969 இல் மன்னரைப் பதவி நீக்கம் செய்து கேர்னல் கடாஃபி அதிகாரத்தைக் கைப்பற்றினார்.

## காலநிலை

பொதுவாக நாட்டின் 90% பகுதி அதிஉயர் வெப்பநிலையைக்கொண்டுள்ளது. மத்திய தரைக்கடலில் கரையோரத்தைக்கொண்ட பிரதேசங்கள் குளிர்ச்சியாகவும் ஈரலிப்பாகவும் காணப்படும். மாரிகாலத்தில் எப்போதாவது மழைவீழ்ச்சி கிடைக்கும்.

## கலாசாரம்

லிபிய கலாசாரத்தில் அண்டைய மக்ரேபிய மாநிலங்களின் கலாசாரத்தின் தாக்கத்தை அவதானிக்கக்கூடியதாக இருந்தாலும், அரேபிய சமூக கலாசாரம் வெகு உறுதியாக இருக்கின்றது.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (1998): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள் 500,000; செல்லிடத் தொலைபேசிப் பாவனையாளர்கள் 20,000. வானொலி ஒலிபரப்பு நிலையங்கள் (2002) : Am 16, Fm 3, SW 3. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (1999): 12. **இணையத்தள வழங்குனர்கள்** (2002): 1; இண்ணயத்தளப் பாவனையாளர்கள்: 20,000.

## போக்குவரத்து

**பெருந்தெருக்கள்** (1999): மொத்தம் 83,200 கி.மீற்றர் (இதில் செப்பனிடப்பட்டவை 47,590 கி.மீ; செப்பனிடப்படாதவை 35,610 கி.மீற்றர்).

**துறையும் துறைமுகமும்:** அல்கூம்ஸ், பென்காசி, டர்னாஹ், மார்சா அல் புரைகா மிஸ்ரட்டா, ராஸ்லானுப், டொப்ருக், ட்ரிபோலி, ஸுவாராஹ். **விமான நிலையங்கள்** (2002): 136.



லிபிய மக்கள் அவை

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம்: 1%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** தானியங்கள், ஒலிவ், பேரீச்சை, மரக்கறி வகைகள், சோயா பீன்ஸ், மாட்டுப் பண்ணை. **தொழிலாளர் தொகை** (2004): 1.64 மில்லியன். **வேலையற்றோர்:** 30%. **கைத்தொழில்கள்:** பெற்றோலியம், இரும்பு மற்றும் இரும்புருக்கு, உணவு உற்பத்திப் பொருட்கள், புடவை, கைவேலைப்பாடுகள், சீமெந்து. **இயற்கை வளங்கள்:** பெற்றோலியம், இயற்கை வாயு, ஜிப்சம். **ஏற்றுமதிகள்:** சுத்திகரிக்கப்படாத எண்ணெய், பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள், இயற்கை வாயு. **இறக்குமதிகள்:** இயந்திரங்கள், போக்குவரத்து சாதனங்கள், முதலீட்டுப் பொருட்கள், உணவு, நுகர்வோர் பொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): இத்தாலி, ஜேர்மனி, ஸ்பெய்ன், துருக்கி, பிரான்ஸ், தென் கொரியா, ஐக்கிய ராச்சியம், டியுனீசியா.

## பிரசித்தி பெற்ற இடங்கள்

✱ ட்ரிபோலி செங்கோட்டை ✱ மார்கஸ் ஒரேலியஸ் வளைவு ✱ பச்சை சதுக்கம் ✱ ஜமாஹிரியா நூதனசாலை ✱ ஓஃப்ஷவர் தீவுகள் ✱ பாடம்ஸ் நகர் ✱ சப்ரதா நகர் ✱ பங்காசி மிருகக்காட்சிசாலை.

ட்ரிபோலி நகரிலுள்ள முக்கிய தலங்கள்





ஓஃப்ஷவர் தீவுகள்

சப்ரதா நகர் ரோமானிய கட்டட இடிபாடுகள்

பங்காசி மிருகக்காட்சிசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உலகுக்கு இலங்கையரின் கண்டுபிடிப்பு**

# உலகின் மிகச் சிறிய ஐதரசன் எரிபொருள் பிறப்பாக்கி

**எரிபொருள் பிரச்சினையானது எதிர்காலத்தில் முகம்கொடுக்க வேண்டிய மிக முக்கிய பிரச்சினையாகவே இருக்கின்றது. தற்போதே, இப்பிரச்சினையானது படிப்படியாக உணரப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இதற்கு ஐதரசன் எரிபொருளே ஒரே மாற்று வழியாகும். அந்தவகையில், நீரை விஞ்ஞான ரீதியான மாற்றத்திற்குட்படுத்துவதன் மூலம் ஐதரசன் வாயுவைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த ஐதரசன் உருவாக்கத்தையடுத்து, கழிவுப் பொருளாகஅ தூய நீர் மட்டுமே வளிமண்டலத்துடன் சேர்கின்றது. வேறு கழிவுகள் வளியில் இணைவதில்லை. இன்றைய உலகம் படிவு எரிபொருளினால் பல்வேறு தீய விளைவுகளுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது. இத்தகைய தீய விளைவுகளில் இருந்து பாதுகாப்புப் பெற சுற்றாடலுடன் இசைந்து செல்லும் எரிபொருளே சிறந்த மாற்று வழியாகும்.**


உலர் ஐதரசன் எரிபொருள் கலவை



சாதாரண மோட்டார் வாகனம் ஒன்றின் இயந்திரத்தில் எரிபொருள் பாய்ச்சும் பகுதி. உலர் ஐதரசன் எரிபொருள் பிறப்பாக்கி மோட்டார் வாகனத்திற்குப் பொருத்தப்பட்ட பின்னர் அதில் நிகழும் எரிபொருள் பரிமாற்றம்


உலர் ஐதரசன் எரிபொருள் பிறப்பாக்கி மோட்டார் வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள விதம்




உலர் ஐதரசன் எரிபொருள் பிறப்பாக்கி பொருத்தப்பட்ட வாகனம்


டபிள்யூ.ஏ. கீர்த்தி ஆர் டி சில்வா

அந்த வகையில் ஐதரசன் முக்கியமான வாயுவாகும். எனினும், அதனை எரிபொருளாக சேமித்து வைப்பது ஆபத்து விளைவிக்கக்கூடியதாகும். இருந்தபோதும் ஐதசரன் படிவை எரிபொருளாக மாற்றமுறச் செய்து வாகனங்களைச் செலுத்தும் பல்வேறு நாடுகள் உள்ளன. அங்கு எரிபொருளுக்குப் பதிலாக நீரில் இருந்து பிரித்தெடுக்கப்படும் ஐதரசன் எரிபொருள் பிறப்பாக்கி பயன்படுத்தப்படுகின்றது. அதன்மூலம் உற்பத்தியாகும் ஐதரசன் சிலிண்டரில் சேமிக்கப்படுகின்றது.

ஆனாலும், இந்த எரிபொருளில் இயங்கும் மோட்டார் வாகனம் திடீர் என விபத்திற்குள்ளானால் பாரிய வெடிப்பு ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது. அதனால், ஐதரசன் எரிபொருளில் இயங்கும் வாகனத்தில் பிரயாணம் செய்யப் பலர் பின்வாங்குகின்றனர்.

## இலங்கையரின் கண்டுபிடிப்பு

இப்பிரச்சினைக்குத் தீர்வாக மாற்று வழியைக் கண்டுபிடிப்பதற்கு டபிள்யூ.ஏ.கீர்த்தி ஆர் டி சில்வா எனும் இலங்கையர் ஒருவரால் முடிந்திருக்கின்றது. இவர் ஒரு சிவில் பொறியியலாளர் என்பதுடன், மோட்டார் வாகன பொறியியல் ஆலோசகருமாவார். இவ்விடயம் தொடர்பாக, இவர் மூன்று வருடங்களாக ஆய்வுகளை நடத்தியுள்ளார். அதன் பிரதிபலனாக உலகிலேயே மிகச்சிறிய ஐதரசன் எரிபொருள் பிறப்பாக்கியைக் கண்டுபிடிக்க அவரால் முடிந்துள்ளது.

## கண்டுபிடிப்பின் சிறப்பு

பெற்றோல் மற்றும் டீசலில் இயங்கும் எந்த இயந்திரத்திலும் இந்த ஐதரசன் எரிபொருள் பிறப்பாக்கியைப் பொருத்த முடியும். இயந்திரத்தினுள் தொழிற்படும் பெற்றோல் மற்றும் டீசலை அந்த இயந்திரத்தினுள் முழுமையாகத் தாக்கம் புரியச் செய்யமுடியும். எனினும், $Co_2$, $No_2$, $So_2$ ஆகிய கழிவுகள் வெளிப்படுவது அந்த எரிபொருள் முழுமையாகப் பயன்படுத்தப்படாத போதாகும். இந்த உலர் ஐதரசன் எரிபொருள் பிறப்பாக்கியை இயந்திரத்தில் பொருத்தியிருக்கின்றபோது, அதன்மூலம் உற்பத்தியாக்கப்படுகின்ற ஐதரசன் வாயுவும் இயந்திரத்தின் பௌதீக செயற்பாட்டுப் பகுதிக்குள் பிரவேசிக்கின்றது.

இந்த உலர் ஐதரசன் இயக்கியை பொருத்தும்போது, எரிபொருள் சிறப்பாகப் பயன்பட்டு இயந்திரம் நல்ல முறையில் இயக்கப்படுகின்றது. அத்துடன், வளிமண்டலத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தும் கழிவுப் பொருட்கள் எதுவும் வெளிப்படுவதில்லை.



## முன்னைய தொழில்நுட்பத்தின் குறைபாட்டை நிவர்த்தி செய்தல்

இந்தத் தொழில்நுட்பமானது நீண்ட காலத்திற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டதாகும். ஆனாலும் அதில் பல குறைபாடுகள் காணப்பட்டன. உற்பத்தியாகும் ஐதரசனும் பாதுகாப்பற்ற முறையில் சேமிக்கப்பட்டது. இது ஆபத்து மிகுந்ததாகவே காணப்பட்டது. 1000 கி.மீ தூரம் வாகனம் செலுத்தப்பட்ட பின்னர் எரிபொருள் பிறப்பாக்கி பழுதுபார்க்கப்பட வேண்டிய தேவையும் ஏற்பட்டது.

ஆனாலும், கீர்த்தி டி சில்வாவால் தயாரிக்கப்பட்ட இயந்திரம் இந்த நிலைமைகளுக்கு முற்றிலும் வேறுபட்டதாகும். இந்த எரிபொருள் பிறப்பாக்கி மிகவும் பாதுகாப்புக்கூடியதாகும். 30-40 செல்சியஸ் அளவு மிகவும் குறைந்த உஷ்ண நிலையில் நீரை விஞ்ஞான தொழிற்பாட்டுக்குட்படுத்தி தாக்கமுறச் செய்யலாம். அதற்காக, 3-8 அம்பியர் [illegible] மின்சாரம் போதுமானதாகும். ஒரு நிமிடத்திற்கு 1-$1^{1/2}$ லீற்றர் அளவு ஐதரசன் உற்பத்தியாக்க முடியும். இந்த இயந்திரத்தின் மற்றொரு முக்கியத்துவம் ஐதரசன் உற்பத்தியாவது வாகனத்திற்குத் தேவையான அளவில் மட்டுமே உற்பத்தியாக்கப்படும். அத்துடன், ஐதரசன் வாயு சேமிக்கப்படுவதும் இல்லை. இத்தகைய திருத்தத்திற்குட்படுத்தாமல் 50,000 கி.மீ தூரத்திற்கு மேல் செலுத்த முடியும்.

## முன் மாதிரியானவர்

நீர் வலுவில் சக்தியை வாகனங்களுக்கு வழங்கக்கூடிய எரிபொருள் தொழிற்பாட்டுத் தொகுதியானது வாகனங்களின் செயற்றிறனை அதிகரிக்கச் செய்கின்றது. சுற்றாடலுக்கும் பாதுகாப்பைத் தருவதோடு, சுபீட்சமான எதிர்காலத்திற்குரிய சூழலுக்கு வழிவகுப்பதாகவும் அமைகின்றது. இலங்கையில் இருந்து உலகிற்கு புதிய கண்டுபிடிப்பொன்றை அறிமுகம் செய்தமை நம் நாட்டிற்குப் பெருமை சேர்ப்பதாகவே அமைகின்றது.

தாம் பெற்ற அனுபவங்களில் இருந்து உலகிற்கு புதிய இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்து அறிமுகம் செய்வது இலகுவான காரியம் அல்ல. அதற்காக அர்ப்பணிப்பும் தியாகமும் தேவைப்படுகின்றன. கீர்த்தி டி சில்வாவிடம் இருந்து நாம் கற்கவேண்டிய பாடம் இதுவாகும். அவரின் மோட்டார் வாகனத் தொழில்நுட்ப அறிவுத்திறனைக் கொண்டே இந்தக் கண்டுபிடிப்பைச் செய்துள்ளார். புதிய கண்டுபிடிப்புக்களில் ஈடுபட கல்வி அறிவு, விளையாட்டு மற்றும் கலைத் துறைகளிலான ஈடுபாடும் கூடுதல் உற்சாகத்தை வழங்குகின்றது.

## உலர் ஐதரசன் எரிபொருள் பிறப்பாக்கியை வாகனத்தில் பொருத்துவதால் கிடைக்கும் பிரதிபலன்

- எரிபொருள் பயன்பாடு அதிகரிக்கும். 40-50% எரிபொருள் சிக்கனம் ஏற்படும்.
- வாகன இயந்திரத்தின் (Engine) தொழிற்பாடு திறம்பட நிகழும்.
- இயந்திரத்தில் இருந்து வெளியேறும் ஆவி குறைவடையும்.
- பராமரிப்புக்கு இலகுவானது.
- கோளாறுகள் ஏற்படுவதில்லை.
- இந்த எரிபொருள் தொழிற்பாடு தன்னியக்க செயற்பாடாகும்.
- எரிபொருள் பூரணமாகப் பயன்படுத்தப்படும்.
- ஐதரசன் சேமிப்பு இல்லை (அதனால் வெடிப்பால் ஏற்படும் ஆபத்து அச்சம் இல்லை) உற்பத்தியாகும் ஐதரசன் உடனுக்குடன் பயன்படும். தேவையான ஐதரசன் அளவு மட்டுமே உற்பத்தியாகும்.

## உலர் ஐதரசன் எரிபொருள் பிறப்பாக்கித் தொகுதி

- பூகோள உஷ்ணத்தைத் தணிக்க தீர்வாகும்.
- காபன்மொனக்சைட் (Co) வெளிப்படாது.
- நைட்ரஜன் ஒக்சைட் (NQ) வெளிப்படாது.
- ஹய்ட்ரோ காபன் HC வெளிப்படுவதில்லை.
- சூழல் மாசடையாது.
- எந்தவிதமான உருமாற்றம் இன்றி டீசல், பெற்றோல் இயந்திரங்களுக்கும் பொருந்தலாம்.
- செலவு குறைவு.
- இலகுவில் பொருத்தக்கூடியது.
- குறைந்த உஷ்ணத்தில் குறைவான மின்சாரத்தில் ஐதரசன் உற்பத்தியாகும்.
- மோட்டார் சைக்கிள், முச்சக்கரவண்டி, மோட்டார் வாகனங்கள், பஸ் ஆகியவற்றுக்கும் இதனைப் பொருத்தலாம்.

**அமீர் ஹுஸைசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - II

பெயர்: ................................................ 1 மணி 15 நிமிடங்கள்

01. கீழ்வரும் அறிவுரைகளை வாசித்து (i) தொடக்கம் (v) வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அறிவுரைகள்**

- ★ *தினமும் எட்டு மணி நேரம் உறங்குங்கள்.*
- ★ *கடிகாரத்தின் உதவியுடன் நீங்களே காலையில் எழுந்து விடுங்கள்.*
- ★ *அப்போதுதான் பாடசாலைக்குப் பதற்றம் இல்லாமல் செல்ல முடியும்.*
- ★ *பற்றூரிகையை எப்போதும் ஒரே இடத்தில் வையுங்கள்.*
- ★ *குளிப்பதில் இருந்து பள்ளி செல்லத் தயாராவது வரை உங்கள் வேலைகளை நீங்களே செய்து கொள்ளுங்கள்.*
- ★ *பாடசாலை முடிந்து வீட்டுக்கு வந்தவுடன் பாதணி, புத்தகப்பை போன்றவற்றை அதற்குரிய இடங்களில் வையுங்கள்.*
- ★ *அதன் பின்னர் கை-கால், முகம் கழுவுங்கள்; உணவு உண்ணுங்கள்.*
- ★ *மாலையில் சிறிது நேரம் விளையாடுங்கள்.*
- ★ *பின்னர் வீட்டுப் பாடங்களை எழுதுங்கள்; படியுங்கள்.*
- ★ *எத்தகைய பிரச்சினை என்றாலும் அதை அம்மாவிடம் மறைக்காமல் சொல்லுங்கள்.*

(i) தினமும் எத்தனை மணி நேரம் உறங்க வேண்டும்? ..........................................

(ii) காலையில் யாரும் எழுப்பாமல் நாமே எழும்ப வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? ..........................................

(iii) பாடசாலை முடிந்து வீட்டுக்கு வந்ததும் என்ன செய்ய வேண்டும்?
..........................................

(iv) எப்போது விளையாட வேண்டும்?..........................................

(v) எந்தப் பிரச்சினையையும் மறைக்காமல் யாரிடம் சொல்ல வேண்டும்?
..........................................

02. அடைப்புக்குள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து, வெற்றிடத்தை நிரப்புக.

(i) உணவு உண்ட பின்னர் சிறிது தூரம் .............................. வது நல்லது.
(உலவு, உளவு, உழவு)

(ii.) அவளது நிலைமையைக் கண்டு அங்குள்ள அனைவரும் ..............................
(இரங்கிணர், இறங்கினர், இரங்கினர்)

(iii) அவன் எய்த .............................. பட்டு மான் கீழே விழுந்தது.
(பாநம், பாணம், பானம்)

03. (i) பின்வரும் வாக்கியத்தை ஒருமையாக மாற்றி எழுதுக.
கானகத்தில் மிருகங்கள் நீரின்றி அலைந்தன.
..........................................

(ii) பின்வரும் வாக்கியத்தைப் பன்மையாக மாற்றி எழுதுக.
மரம் காற்றில் அசைந்து ஆடியது.
..........................................

04. பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்துள்ள சொற்களின் எதிர்க்கருத்துள்ள சொற்களை வைத்து வாக்கியங்களை மறுபடியும் எழுதுக.

(i) கஜன் உண்மை பேசியதால் எல்லோரும் அவனைப் போற்றினார்கள்.
..........................................

(ii) நந்தன் குற்றவாளி என நீதிபதி தீர்ப்புக் கூறினார்.
..........................................

05. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.

(i) தோள் கொடுத்தல் - ..........................................
(ii) நாக்குப் புரளுதல் - ..........................................
(iii) ஒற்றைக் காலில் நிற்றல் - ..........................................

06. பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

(i) தேர்தல் ஒன்றில் போட்டியிடுபவன் - ..........................................
(ii) அரசன், ஆசிரியர், தந்தை, தாய், தமையன் ஆகியோர் - ..............................

07. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.

(i) கந்தையானாலும் கசக்கிக் கட்டு - ..........................................
(ii) பேராசை பெருந் தரித்திரம் - ..........................................

08. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக.
மகா வித்தியாலயம்/கல்வியிற்/பாரதி/விளங்கியது/சிறந்து
..........................................

09. ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

(i) வகுப்பறை ..........................................
(ii) அதிபர் ..........................................
(iii) ஆசிரியர் ..........................................

10. கருத்தை தமிழில் எழுதுக.

(i) I am sorry - ..........................................
(ii) Please sit down - ..........................................
(iii) How are you? - ..........................................




11. பின்வரும் ஒவ்வொரு சிங்கள வாக்கியத்தினதும் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) ஒயா(G)கே பாசலே நம மொகக்த? ..........................................
(ii) ம(ட்)ட வ(த்)துர டிகக் (Dh)தென்ன ..........................................

★ *12 தொடக்கம் 38 வரையுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையின்கீழ்க் கோடிடுக.*

12. இலைக்கஞ்சி தயாரிக்கப் பயன்படும் தாவர இலை எது?
(1) கோப்பை இலை (2) கொடிக்கள்ளி இலை
(3) சீக் குறிஞ்சி இலை (4) அலரி இலை

13. இரு வித்திலைத் தாவரம் எது?
(1) பப்பாசி (2) தென்னை (3) பனை (4) கமுகு

14. தொட்டாற்சிணுங்கிப் பூவின் வடிவமுடைய பூ எது?
(1) அகத்தி (2) சூரியகாந்தி (3) முருங்கை (4) இப்பிலிப்பில்

15. தென்னம் வண்டு தென்னையைத் தாக்காது பாதுகாக்க தென்னைக்கு அருகில் வளர்க்கப்படும் தாவரம் எது?
(1) குருவிச்சை (2) கரும்பு (3) கொடிக்கள்ளி (4) பிரம்பு

16. கொத்தாகப் பூக்கும் பூ எது?
(1) அலரி (2) செவ்வரத்தை (3) சூரியகாந்தி (4) ரோசா


17. எல்லாக் காலத்திலும் பூக்கும் தாவரம் எது?
(1) வேம்பு (2) தென்னை (3) இலுப்பை (4) முள்முருக்கு

18.  இவ்வுருவில் உள்ள தாவரம் எது?
(1) குப்பைமேனி (2) ஆமணக்கு
(3) கற்பூரவள்ளி (4) கண்டங்கத்தரி

19. கழிச்சல் நோயைப் பரப்பும் பிராணி எது?
(1) நாய் (2) எலி (3) ஈ (4) நுளம்பு

20. எட்டுக்கால்களை உடைய பிராணி எது?
(1) தேவாங்கு (2) ஆந்தை (3) நாகணவாய் (4) வெளவால்

22. மகிழ்ச்சியான முகம் காட்டும் உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3) (4)

23. நுகர்வுக்கான வர்த்தகப் பொருட்களின் தரத்தினை உறுதிப்படுத்தும் இலங்கையின் இலச்சினை எது?
(1) ISO (2) SLS (3) SOS (4) ISBN

24. உடல் வளர்ச்சிக்கு உதவும் உணவின் கூறு எது?
(1) இலிப்பிட்டு (2) விற்றமின் (3) காபோவைதரேற்று (4) புரதம்

25. கடவுச் சீட்டு வழங்கும் திணைக்களம் எது?
(1) ஆட்பதிவுத் திணைக்களம் (2) குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்
(3) சுங்கத் திணைக்களம் (4) பொலிஸ் திணைக்களம்

26. இலங்கையின் அரச இலச்சினையில் காணப்படும் மூன்று பகுதிகள்;
(1) தர்ம சக்கரம், நெற்கதிர், அரச இலைகள்
(2) அரச இலைகள், பூவிதழ்கள், நெற்கதிர்
(3) தர்ம சக்கரம், நெற்கதிர், வாளேந்திய சிங்கம்
(4) நெற்கதிர், சங்கு, தர்ம சக்கரம்

27. இலங்கையின் தேசிய கீதத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் யார்?
(1) ஆனந்த் சமரக்கோன் (2) புலவர்மணி மு.நல்லதம்பி
(3) C.W.W.கன்னங்கரா (4) டி.பி.ஜாயா

28. தென்மாகாணத்தின் தலைநகரம் எது?
(1) கண்டி (2) கொழும்பு (3) பதுளை (4) காலி

29. இலங்கையின் தேசிய மலர் எது?
(1) நீலோற்பலம் (2) சூரியகாந்தி (3) மல்லிகை (4) நாகமலர்

30. களனி கங்கை கடலுடன் கலக்கும் இடம்;
(1) கொழும்பு (2) திருகோணமலை (3) மாத்தறை (4) களுத்துறை

**மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயில் காலங்களில் இரவு-பகல் பாராது கஷ்டப்பட்டு உணவுகளைச் சேகரிக்கும் எறும்புகள், அளவில் சின்னஞ் சிறியனவாக இருந்தாலும் சுறுசுறுப்பிலும் ஒற்றுமையிலும் மனிதர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கின்றன. எமது சுற்றுப் புறச்சூழலில், கறுப்பு எறும்பு, சுள்ளான், கடியான்கள், எண்ணெய் எறும்பு, சிவப்பெறும்பு, தேன்குட எறும்பு எனப் பலவகை எறும்புகள் உள்ளன. பூமியில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கைக்கு சமமான அளவிலான எறும்புகள் பூமியில் வசிக்கின்றன என்று அனுமானிக்கப்படுகின்றது. இவை கூட்டாக சமூக மயப்படுத்தப்பட்ட வாழ்க்கையையே வாழ்கின்றன.

உலகம் முழுவதும் 14 ஆயிரம் வகைக்குட்பட்ட எறும்பினங்கள் வசிப்பதாகக் கூறப்படுகின்றது. அதன்படி, இலங்கையில் மட்டும் இனங்காணப்பட்ட 181 எறும்பினங்கள் உள்ளன. தவிர, அடையாளம் காணப்படாத பல எறும்பு இனங்களும் உலகில் உள்ளன.

# எறும்புகளின் உலகுக்கு ஒரு பயணம்



## பெரும் தொல்லை; என்றாலும்....

இந்த எறும்புகள் சிலவேளைகளில் பெரும் தொந்தரவு தரும் உயிரினமாகத் திகழ்கின்றன. ஒருசில பயிர்களில் நோய்கள் பரவுவதற்கும் பரப்புவதற்கும் இவையே காரணமாக இருக்கின்றன. ஆனால், எமக்குத் தெரியாமல் பல்வேறு நன்மைகள் இவற்றினால் எமக்குக் கிட்டுகின்றன. அவற்றில் ஒன்றுதான் இவை சூழலை சுத்தப்படுத்துவோராகத் திகழ்கின்றமை. சிறிய உணவுத் துண்டுகள் எங்கேயாவது விழுந்திருக்கும்போது, இந்நிலையை நாம் அவதானிக்கலாம். எறும்புகள் தம்மைவிடப் பெரிய உணவுத் துண்டுகளைத் தனியாகவோ அல்லது பல எறும்புகள் ஒன்று சேர்ந்து கூட்டாகவோ காவிச் செல்வதை நாம் காணக் கூடியதாக இருக்கும். ஒவ்வொரு இடத்திலும் விழுந்து கிடக்கும் உணவுத் துண்டுகளை அவற்றின் வசிப்பிடங்களுக்கு எடுத்துச் சென்று தமது உணவுத் தேவைக்காக அவற்றைப் பயன்படுத்திக் கொள்வது சமூக இயல்பு கொண்ட எறும்புகளின் வழக்கமாகும்.

இதுதவிர; இறந்த விலங்கினங்களின் பகுதிகள், தாவரங்களின் பகுதிகள், உக்கிப் போன பகுதிகள் என்பனவற்றையும் எறும்புகள் உணவாகக் கொள்ளும். சூழலை சுத்தமாகவும் சமநிலையாகவும் வைத்துக்கொள்ள இவை அளப்பரிய சேவையாற்றுகின்றன. அத்துடன், தாவரங்களின் விதைகளை இடத்திற்கிடம் பரப்புவதற்கும் இவை பெரும் பங்காற்றுகின்றன. வனாந்தரங்களில் பரவிக் கிடக்கும் பயிர்களின் விதைகளை உணவுக்காக இவை காவிச்செல்கின்றன. இதன்போது, சில சந்தர்ப்பங்களில் விதைகள் கீழே விழுந்துவிடுகின்றன. அந்த விதைகள், விழுந்த இடங்களில் முளைத்து விடுவதால் 'தாவரப் பரம்பல்' இடம்பெறுகின்றது. அத்துடன், இயற்கையின் உணவுற்பத்தி செயற்பாடுகளிலும் எறும்புகள் ஈடுபடுகின்றன.

## வசிப்பிடங்கள்

எறும்புகள் தரையின்கீழ் அல்லது மரங்களின் அடிப்பாகத்தில் தமக்கான வசிப்பிடங்களை அமைத்துக்கொள்கின்றன. சில சமயங்களில் தரையில் அமைக்கப்பட்டுள்ள பரந்தளவிலான எறும்புப் புற்றுக்களை காணக் கூடியதாகவும் இருக்கும். தவிர, கற்களின் அடியிலும் உக்கிப்போன மரப்பாகங்களிலும் எறும்புகள் வசிக்கும்.



தாவரப் பகுதிகளைக்கொண்டு வசிப்பிடங்களை அமைக்கும் எறும்புகள்

## எறும்புகளின் உடல் அமைப்பு

எறும்புகளின் உடலானது தலைப்பகுதி, தோள்ப்பகுதி, வயிற்றுப்பகுதி என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றது. சிலவற்றுக்கு நெருக்கமாக அமைந்துள்ள சோடிக் கண்கள் அல்லது தனித்தனியாக அமைந்துள்ளவாறு மூன்று கண்கள் காணப்படும். மூன்று மூட்டுக்களைக் கொண்ட மூன்று சோடிக் கால்கள் உள்ளன. எறும்பு ராணிக்கும் ஆண் எறும்புகளுக்கும் ஒரு சோடி இறக்கைகள் உள்ளன. தலையில் நீண்டிருக்கும் கொம்புகள் முகத்தினைப் போன்று அமைந்திருக்கும். எறும்புகளின் வாழ்க்கை வட்டம் நான்கு கட்டங்களைக் கொண்டதாகும். முட்டை, குடம்பி, கூட்டுப்புழு, வளர்ந்த எறும்பு என்பனவே அவையாகும்.

எறும்புகளின் ராணியே முட்டையிடும். கூடவே,வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கும் எறும்புகள் இந்த முட்டைகளைப் பாதுகாக்கும். குடம்பிகளுக்கு உணவு கொடுப்பது, சந்ததிகளைப் பாதுகாப்பது, உணவுகளை சேமிப்பது, வசிப்பிடத்திற்குப் பாதுகாப்பளிப்பது என்பனவும் இவற்றின் கடமைகளாகும். இவை ஒருபோதும் இனப்பெருக்கத்தில் ஈடுபடுவதில்லை. தமது இனத்தின் இருப்பிற்கு உதவி செய்தவாறு ராணியை போஷித்து வாழும் இந்த வேலைக்கார



எறும்புகள், மூன்று மாதங்கள் எனும் குறுகிய காலப்பகுதியில் இறந்துவிடும். ஆனால், ஒருசில ராணி எறும்புகள் 15 ஆண்டுகள் வரை உயிர் வாழும்.

## உணவு

பெரும்பாலான எறும்புகள் அனைத்தும் உண்ணிகளாகவே திகழ்கின்றன. பூக்களின் தேன், இறந்த விலங்குகளின் உடற்பாகங்கள், மக்கிப் போகும் தாவரப் பகுதிகள், ஒருசில உயிரினங்களின் கழிவுகள் என்பனவற்றையும் இவை உணவாகக் கொள்ளும். எறும்புகளில் ஒருசில, வேலைக்கார எறும்புகள் மாமிச உண்ணிகளாக இருக்கின்றன. இவை புழுக்கள், சிலந்திகள் மற்றும் பல்லிகள் என்பனவற்றை தமக்கு இரையாக்கிக் கொள்கின்றன. அதேவேளை, எறும்புகளில் சொற்பமானவை தாவர உண்ணிகளாக விளங்குகின்றன. இந்த எறும்புகள் காளான்கள், தாவரப்பகுதிகள் என்பன இவற்றின் உணவுகளாகும்.

## தொடர்பாடல்

எறும்புகள் எப்பொழுதும் ஒரே வரிசையில் பயணிப்பதைக் கண்டிருப்பீர்கள். உணவு இருக்கும் இடத்தினை நோக்கியே இவ்வாறு கூட்டமாகவும் துரிதமாகவும் பயணிக்கின்றன. இவற்றின் மத்தியில் இருக்கின்ற தொடர்பாடல் முறையைப் பயன்படுத்தியே இவை ஒன்று கூடுகின்றன.

இதன்படி, அனைத்து வகை எறும்புகளும் தமக்கே உரித்தான ரசாயனத் திரவம் ஒன்றினை சுரக்கின்றன. இதனை 'Pheromones' என்பர். இனங்களைப் பிரித்தறிய இந்த 'Pheromones' உதவுகின்றது. எறும்புகள் பயணிக்கும்போது, இந்த ரசாயனத் திரவம் அவை பயணிக்கும் பாதைகளில் சிந்தப்படும். இதனைப் பின்பற்றியே ஏனைய எறும்புகளும் அணிவகுக்கின்றன. தமது கூட்டத்தின் இதர எறும்புகளை அடையாளம் காணவும் தமது வசிப்பிடம் இருக்கும் இடத்தினை அறிந்து கொள்ளவும் உணவினைத் தேடிக் கொள்ளவும் 'Pheromones' உதவுகின்றது. அதேபோன்று வரிசையாகச் செல்லும் போது எறும்புகள் ஒன்றையொன்று சந்தித்துவிட்டுச் செல்வதை அவதானிக்க முடியும். தகவல்களை பரிமாறிக்கொள்ளவே அவை இவ்வாறு செய்கின்றன.



இறந்த விலங்குகளை உணவாகக் கொள்ளும் சந்தர்ப்பம்

## பாதுகாப்பு

தமது வசிப்பிடத்திற்கு ஏதேனும் ஆபத்துக்கள் நேர்ந்தால் எறும்புகள் 'Pheromones' எனும் ரசாயனத் திரவத்தை வெளியேற்றி ஏனைய எறும்புகளுக்கு அதுபற்றி அறிவிக்கும். அப்போது ஏராளமான எறும்புகள் தமது வசிப்பிடத்தை பாதுகாப்பதற்காகவென வசிப்பிடத்தைச் சுற்றி வட்டமிடும். அப்போது ஆபத்து ஏற்படின் சிப்பாய் எறும்புகள் தமது எதிரியைத் தாக்கத் தொடங்கிவிடும். இதன்போது எதிரியின் உடலினுள் போலிக்அமிலம் உட்செலுத்தப்படுவதனால் வேதனை ஏற்படும். சில எறும்புகள் கடித்தால் ஒவ்வாமையும் ஏற்படலாம்.








எனியுரேடிஸ் சைமோனி உயிர்ப்படிமம்

## எறும்புகளின் தனிப்பட்ட அடையாளம்

உயிரியல் விஞ்ஞான வகைப்படுத்தலில் 'Arthropoda' இனத்திற்குட்பட்டது. அதாவது, மூட்டுக்களைக் கொண்ட உடலமைப்பைப் பெற்ற உயிரினமாகும். உடலளவில் சிறியதாக இருந்தாலும் எண்ணிக்கையில் அளப்பரியதாகும்.


ராச்சியம் - மிருகம் (Animalia)
இனம் - (Arthropoda)
வகை - ஜந்து (Insecta)
கோத்திரம் - (Hymenoptera)
குடும்பம் - (Formicidae)

## எறும்புகளின் வாழ்க்கை வட்டம்





## எறும்புகள் சமூகத்தின் உறுப்பினர்கள்





## இலங்கையில் வாழும் படிம எறும்புகள்

இலங்கைக்கே உரிய எறும்பு இனங்கள் இரண்டு உள்ளன. இதில் ஒரு இனம் இரத்தினபுரி மாவட்டத்தின் சில வனாந்தரங்களில் மட்டும் காணப்படுகின்ற 'Aneurates Simoni Emery' உயிர்ப் படிமமும் அதனைச் சார்ந்த எறும்பு இனமும் குறிப்பிடத்தக்கது. மற்றையது, Sterio myrmex horny' எனும் உள்ளூர் வகை எறும்பினமாகும். தற்போதளவில் இவ்விரண்டு இனங்களும் அழிந்து செல்லும் அபாயத்தினை எதிர்கொண்டிருப்பதால் செந்தரவுப் புத்தகத்தில் இவற்றின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பூமியில் உயிரினங்கள் எப்பொழுது உருவாகியதோ, அன்றிலிருந்து இன்று வரை மாறாமல் இருப்பது இயற்கைச் சூழல் மட்டுமே. அதன் சமநிலையில் தளம்பல் ஏற்படுவது என்பது உயிரினங்களின் அழிவுக்கு வழிவகுக்கும்.

இயற்கை ஓர் ஒழுங்கில் இயங்குகின்றது. எனினும், தற்போது இதன்போக்கில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. உதாரணத்திற்கு; திடீர் திடீரெனப் பெய்து எம்மை சிக்கலில் ஆழ்த்தும் மழையைக் குறிப்பிடலாம். அல்லது விவசாயத்தினைப் பாதிக்கும் வறட்சியான காலநிலையைக் குறிப்பிடலாம். இந்த திடீர் காலநிலை மாற்றங்களும் அனர்த்தங்களும் இயற்கைச் சூழலின் சமநிலைத் தளம்பல் நிலையினாலேயே ஏற்படுகின்றன. இது இயற்கையின் தவறன்று; மாறாக, மனிதர்களின் தவறான செயற்பாடுகளின் விளைவாலேயே நிகழ்கின்றது.

# ஓர் உல... எதிர்...







சூறாவளி



பனிப்பாறைகள் கரைதல்

## உலக சூழல் அமைப்பு

நாளுக்கு நாள் உலகம் முன்னேற்றப் பாதையில் பயணித்துக் கொண்டிருப்பினும், அதனால் இயற்கைக்கு ஏற்படும் பாதிப்புகள் எதிர்காலத்தினைப் பாதிக்கும் என்று எவருமே சற்றும் கவனத்தில் கொள்வதாயில்லை. நாளுக்கு நாள் மனிதனால் இயற்கைக்கு ஏற்படும் பாதிப்புகள் அதிகரித்தே செல்கின்றன. இவற்றைத் தடுக்க துரித செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என சூழலியலாளர்களும் அறிஞர்களும் சுட்டிக்காட்டுகின்றனர். அத்துடன், உலக சூழல் தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடும் ஓர் அமைப்பும் ஐக்கிய நாடுகள் சபையின் இணை நிறுவனமாக செயற்பட்டு வருகின்றது. அதுதான் 'உலக சூழல் அமைப்பு'.

1972 ஜூன் மாதம் 5 ஆம் திகதி சுவீடனின் ஸ்டொக்ஹோம் நகரில் கூடிய சூழல் அறிஞர்களும் சூழல் ஆர்வலர்களும் உலக சூழல் அமைப்பினை ஸ்தாபித்தனர். உலகில் அபிவிருத்தி செயற்றிட்டங்களை முன்னெடுக்கும்போது, சூழலுக்கு தீய விளைவுகள் ஏற்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதே இவ்வமைப்பின் பிரதான குறிக்கோளாகும். மற்றும் பல உடன்பாட்டுக் கொள்கைகளும் அமுலில் உள்ளன. அத்துடன், சூழல் பாதுகாப்பினைக் கருத்திற் கொண்டு அரசியல் மற்றும் சமூக ரீதியிலான நடவடிக்கைகளை முன்னெடுக்க நாடுகளை ஊக்குவிப்பது மற்றுமொரு நோக்கமாகும். மேலும், ஐ.நா சபை அங்கீகரித்துள்ள உடன்படிக்கைக்கு அமைய, அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதனை இலக்காகக்கொண்டு ஐக்கிய நாடுகள் சபையின் சூழல் நிகழ்ச்சித்திட்டமும் (UNEP) முன்னெடுக்கப் பட்டது.


## சூழல் என்றால்...

நாம் வாழும் சூழல் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. அதில் ஒன்று; உயிருள்ள சூழல். மற்றையது; உயிரற்ற சூழல் என்பதாகும். நீர்,காற்று, கனியவளம், படிமங்கள், சூரியஒளி என்பன உயிரற்ற சூழலை சேர்ந்தவை.

மனிதர்கள், தாவரங்கள், ஏனைய விலங்கினங்கள் அனைத்தும் உயிருள்ள சூழலைச் சேர்ந்தவை. இதனை மேலும் விரிவாக நோக்குவதாயின், எமது பூமியினை உயிரினக்கோளம், வளிக்கோளம்,கற்கோளம், நீர்க் கோளம் என நான்கு தொகுதிகளாகப் பிரிக்கலாம். சமுத்திரங்கள், கடல், ஏரிகள், ஆறுகள், நீர்வீழ்ச்சிகள் ஆகிய நீர்நிலைகள் நீர்க்கோளத் தொகுதிக்கு உட்பட்டவையாகும்.

புவியின் உட்பகுதியில் உள்ள கோளவகம், இடையோடு, புவியோடு என்பனவும் மேற்பரப்பிலுள்ள சமவெளிகள், மேட்டுநிலங்கள், கண்டங்கள் போன்ற தரைத்தோற்ற அமைப்புகளும் மண், கனிமங்கள், படிமங்கள் போன்றனவும் கற்கோளத்தொகுதியில் அடங்கும். நீர், தரை பகுதிகளில் வாழும் உயிரினங்கள், தாவரங்கள், கண்களுக்குப் புலப்படாத நுண்ணுயிரிகள் என்பன உயிர்க்கோளத் தொகுதியில் அடங்கும். புவியின் மேற்பரப்பை சூழ்ந்து காணப்படும் வளிமண்டலம், அதிலுள்ள வாயுக்கள், தூசுகள் என்பன வாயுக்கோளத்தில் அடங்கும்.

### புவி வெப்பமடைவதால் ஏற்படும் சில பாதிப்புகள்






## சூழல் தொகுதி

உயிர்க்கோளத் தொகுதிக்குள் செயற்படுகின்ற பல்வேறு சமூகக் கட்டமைப்பினை இவ்வாறு கூறலாம். வனாந்தரம் போன்ற சிக்கலான சூழல் கட்டமைப்பும் குளம் போன்ற எளிதான சூழல் கட்டமைப்பும் இதில் அடங்கும்.

## சூழல் எதிர்கொள்ளும் ஆபத்துக்கள்

சூழலின் சமநிலையை உருக்குலைப்பது என்பது உயிர்களின் இருப்புக்கு எச்சரிக்கை விடுவதாக இருக்கின்றது.சூழல் பற்றிப் பேசவும் அதனைப் பாதுகாக்கும் தேவையை பற்றிப் பேசவும் 1960 களில் இருந்தே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தன. எனினும், இன்றுவரை சூழல் பாதுகாப்புக் குறித்த நடவடிக்கைகள் வெறும் பேச்சுக்கும் மாநாடுகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. நாட்டுக்கு நாடு சூழல் சமநிலையைக் குலைக்கின்ற செயற்பாடுகள் இடம்பெற்றவண்ணமே உள்ளன. இதன் விளைவுகளாக அடிக்கடி ஏற்படும் இயற்கை அனர்த்தங்களையும் அதன் பாரதூரமான விளைவுகளையும் குறிப்பிடலாம்.



## கடல்நீர் மட்டம் உயர்வடைதல்

பனித்தட்டுக்கள் கரைதலும் கடல் வெப்பநிலை உயர்வடைதலும் கடல் நீர்மட்டம் உயரக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்;
# காலம்



காரணமாக அமைகின்றது.20 ஆம் நூற்றாண்டில் கடல் நீர் மட்டம் 0.17 மீற்றராக உயர்வடைந்துள்ளது. 2100 ஆம் ஆண்டில் கடல் நீர் மட்டம் 9 முதல் 88 செ.மீற்றர் அளவுக்கு உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால், கடலை அண்டிய பிரதேசங்கள், தீவுகள் பெரும் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்படும்.

UNEP

ஐ.நாவின் சூழல் நிகழ்ச்சித் திட்டம்

### பனிப்பாறை உருகல்

உலக வெப்பநிலை உயர்வடைவதால் பனித்தட்டுகள், பனி மலைகள் உருகத் தொடங்கியுள்ளன. இன்றளவிலும் ஆர்க்டிக் சமுத்திரத்தில் பனித்தட்டுகள் பெருமளவு கரைவதுடன், 21 ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஆர்க்டிக் சமுத்திரத்தில் பனிப்பாறைகளைக் காணமுடியாதிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### வெள்ளப்பெருக்கு

உலகெங்கிலும் பிரதான நதிகள் பெருக்கெடுத்து வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயம் அதிகரித்துள்ளது. காலநிலை மாற்றமும் மனிதனின் முறையற்ற இயற்கைக்கு விரோதமான செயற்பாடுகளுமே இந்த நிலைக்கு ஏதுவாயுள்ளன.

### சூறாவளி, புயற்காற்று

வளிமண்டலத்தில் வெப்பம் உயர்வடைவதால் புயல், சூறாவளி ஏற்படும் நிலைமை அதிகரித்துள்ளது. 2050 இல் இந்நிலைமையில் 5 முதல் 10 சதவீத அதிகரிப்பு ஏற்படக்கூடும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

### உணவு, பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

எமக்குக் கிடைக்கும் பொருட்கள், சேவைகள் அனைத்தையும் இயற்கைச் சூழலிலிருந்தே நாம் பெற்றுக்கொள்கின்றோம். பழங்கள், காய்கறிகள், மாமிசம் என்பன சூழலிலிருந்தே நமக்குக் கிடைக்கின்றன. தாவரங்கள் பூக்கின்றன; காய்க்கின்றன. இயற்கையாகவே ஈரலிப்பான பகுதிகளில் இருந்து அதிக நீரும் வளியிலிருந்து தேவையான வாயுக்களும் அகத்துறிஞ்சப்பட்டு, தாவரங்கள் போஷிக்கப்பட்டு அவற்றினூடாக எமக்கு உணவளிக்கப்படுகின்றது. விலை மதிக்க முடியாத சேவைகள் பல இயற்கைச் சூழலிலிருந்தே கிடைக்கின்றன. எனினும், மரங்களை வெட்டுதல், தாழ் நிலங்கள் மட்டமாக்கப்படல், வயல் நிலங்கள் அகற்றப்படல், சேற்று நிலங்களை மட்டமாக்குதல் ஆகிய செயற்பாடுகளினால் உணவுற்பத்திகள் பாதிக்கப்படுகின்றன.

### வறட்சி

வெப்பநிலை அதிகரிப்பினால் வறட்சி அபாயம் அதிகரிக்கின்றது. இவ்வாறு வறண்ட காலநிலை காற்றாக மாறும்போது காட்டுத் தீ அபாயமும் ஏற்படுகின்றது.

### உலக வெப்பநிலை அதிகரிப்பும் உயிர் அச்சுறுத்தலும்

உலக வெப்பநிலை அதிகரிப்பினால் உயிரினங்களுக்கு நேரடிப் பாதிப்புகள் பல ஏற்படுகின்றன. விலங்குகள் அழிதல், உயிரினங்களின் வசிப்பிடங்கள் குறைவடைதல் மற்றும் அழிவடைதல், உயிரினங்களின் வாழ்க்கைச் சக்கரத்தில் பாதிப்பு ஏற்படல் என்பன உயிரினங்களின் இருப்பில் நேரடித் தாக்கம் புரிகின்றன.தவிர, ஊர்வனவற்றின் ஆண், பெண் பாலுறுப்புகள் மாற்றமடைவதற்கும் புவி வெப்பநிலை அதிகரிப்புக் காரணமாக உள்ளது. இதன்போது, ஆண் உயிரினங்கள் அதிகரிப்பினால் உயிரினப் பெருக்கத்தில் பாதிப்பு ஏற்பட்டு, இறுதியில் அந்த உயிரினங்கள் அழியும் அபாயநிலை ஏற்படுகின்றது. சூழலில் வெப்பநிலை அதிகரிப்புக் காரணமாக, புதிய வகை ஆக்கிரமிப்பு செடிகளில் பரவுவதும் அதிகரிக்கின்றது.

பூமியில் தற்போது இனம் காணப்பட்டுள்ள உயிரினங்களின் எண்ணிக்கை 1.4 மில்லியனாகும். மேலும், உலகில் இதுவரை இனம் காணப்படாத உயிரினங்களும் ஏராளமாக உள்ளன. ஆனால், இந்த மோசமான காலநிலை காரணமாக, அனைத்து உயிரினங்களும் அழிவினை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். இது உலகின் இருப்புக்குப் பாரிய அச்சுறுத்தலாகவே அமையும்.

### பல்வேறு உயிரினங்கள்; ஓர் உலகம்; ஓர் எதிர்காலம்

உயிரினங்களும் சூழலும் ஒரே பிணைப்பினைக் கொண்டதாகும். ஒவ்வொன்றும் ஒன்றை ஒன்று சார்ந்திருக்கின்றது. எமது சூழல் என்பது எமது உலகின் எதிர்காலமாகும். அதனைப் பாதுகாப்பது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். எனவே, சூழலைப் பாதுகாக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் ஏராளம். அவற்றில் சில வருமாறு;

* காடழிப்பினைத் தடுத்தல்.
* மரங்கள், செடிகள், உயிரினங்களுக்கு ஏற்புடைய சூழலை உருவாக்குதல்.
* மனிதனின் தொழில்நுட்ப முன்னேற்றத்தினால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்பினைக் குறைத்தல், புதிய வகைப் பயிர்கள் கண்டுபிடிக்கப்படும்போது பழைய வகைப் பயிர்கள், உயிரினங்கள் என்பனவற்றுக்குப் பாதிப்புகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுத்தல்.
* சூழல் கட்டமைப்பினைப் பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவப்படுத்தல்.
* பாதுகாப்புப் பகுதிகளைக் குறிப்பிடல்
* சரணாலயங்களுக்கு அப்பால் தாவரங்களை, விலங்குகளைப் பாதுகாத்தல்.
* மக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்தல். (இ)






வளி மாசடைதல்



வெள்ளம்



வறட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் பொன்னானது



'காலம் பொன்னானது' என்னும் கூற்றின் ஊடாக காலத்தின் முக்கியத்துவம் வெளிக்காட்டப்படுகிறது. வாழ்க்கை என்பது மனிதன் காலத்தோடு நடத்தும் ஒரு போராட்டமாகும். அந்தப் போராட்டத்தில் அதிகம் பங்கு கொள்ள வேண்டியவர்கள் மாணவ சமூகத்தினரே.

நேரத்தை சிறப்பாகப் பயன்படுத்தி கல்வியைச் சிறப்பாகக் கற்றுக்கொள்ள வேண்டும். நேரத்தை வெல்வதிலேயே மாணவனின் சாமர்த்தியம் தங்கியுள்ளது.

இதன்மூலமே அவன் தன்னுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்துகொள்ள முடியும். இதனால் அவனது செயற்பாடுகள் யாவும் சிறப்பாக அமையும். கல்வி கற்கும் ஒவ்வொரு மாணவரும் நேரத்தை இயன்றளவு பயனுடையதாக்கிக் கொள்ள வேண்டும்.

*ஆர்.ஷர்மிளா, தரம் - 08,*



# அவசரக்காரனுக்குப் புத்தி மத்திமம்

கந்தசாமிக்கு பெற்றோர் விட்டுச்சென்ற வீடு, தோட்டம், காணி என்று பல வசதிகள் இருந்ததால் அவன் எந்தவித உழைப்பிலும் ஈடுபடாமல் காலத்தைக் கழித்து வந்தான். இப்படியே போனால் தனது சொத்துக்கள் எல்லாம் அழிந்து, தான் வறுமை நிலைக்கு ஆளாக வேண்டுமென்று உணர்ந்த அவன் தன் தோட்டத்தில் விவசாயம் செய்து முன்னேறுவது எனத் தீர்மானித்துக் கொண்டான்.

அதன்படி, அவன் தனது தோட்டத்தில் விவசாயம் செய்ய ஆரம்பித்தான். ஆனால், என்ன கொடுமை? அவன் கடுமையாக வேலை செய்து பாடுபட்டு விதைத்த விதைகள் எதுவுமே முளைக்கவில்லை. அவனது ஆசை நிராசையானது மனம் நொந்த அவன் ஒருநாள் அவ்வூர் பெரியவரிடம் சென்று ஆலோசனை கேட்டான். ''நான் கஷ்டப்பட்டுத் தோட்டம் செய்தேன். ஆனால், விதைகள் எதுவுமே முளைக்கவில்லையே'' என்று துயரத்துடன் கூறினான். அவனைச் சமாதானப்படுத்திய அவ்வூர் பெரியவர் விதை போட்டால் நீர் ஊற்ற வேண்டும். நீ ஒழுங்காக நீர் ஊற்றி இருக்க மாட்டாய்'' என்றார்.

''இல்லை ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள் தாராளமாக நீர் ஊற்றினேன்'' என்றான். தினமும் இரண்டு தடவை நீர் விட்டதால் சிலவேளை, விதைகள் அழுகிப் போயிருக்கும்'' என்றார் பெரியவர். அதற்கு கந்தசாமி ''இல்லை ஒரு விதைகூட அழுகவில்லை'' என்று உறுதியாகக் கூறினான். ''அது எப்படி உனக்குத் தெரியும்?'' என்று கேட்டார் பெரியவர். ''அது தான் நான் விதை முளைக்கிறதா? இல்லையா? என்று தினமும் எடுத்து எடுத்துப் பார்த்தேனே'' என்றான் கந்தசாமி.

அதைக்கேட்டுத் தலையில் அடித்துக்கொண்ட பெரியவர் தினம் தினம் விதையை எடுத்துப் பார்த்தால் அது எப்படி முளைக்கும். அதற்கு என்று ஒருகாலம் இருக்கிறது. அதுவரை காத்திருக்க வேண்டும் என்று விளங்கப்படுத்தினார் பெரியவர். ஒருவரிடம் உழைப்பு மட்டும் இருந்தால் போதாது, புத்திசாலித்தனமும் பொறுமையும் இருக்க வேண்டும் என்பதை இக்கதையின் மூலம் அறியலாம்.

எம்.ஜெயகலா, பி.கிருஷாந்தி,
தரம் - 10, ப/கிரேக் த.ம.வித்., பண்டாரவளை.

# முதலாவது விண்வெளி வீரர்

சந்திரனில் மனிதன் காலடி வைத்து 40 வருடங்களாகி விட்டன. ஆனால், முதன்முதலில் விண்வெளியில் பூமியைச் சுற்றி வந்த பெருமை சோவியத் யூனியனைச் சேர்ந்த யூரி ககாரினையே சாரும்.

யூரி ககாரின் ரஷ்யாவில் ஒரு பின் தங்கிய கிராமத்திலுள்ள குடும்பத்தில் பிறந்தார். இவர் ஆரம்பத்தில் உலோக வார்ப்புத் தொழிலில் பயிற்சி பெற்றார். அதன்பின் விமானம் கட்டும் பயிற்சிப் பாடசாலையில் சேர்ந்தார். இவருடைய கடும் உழைப்பாலும் விவேகத்தாலும் ரஷ்ய விமானப் படையில் சேரும் தேர்வில் வெற்றி பெற்றார். சில காலத்தின் பின் யூரி ககாரின் விண்வெளிப் பயணத்துக்கான பயிற்சிக்குத் தெரிவானார்.

யூரி ககாரின் 1961 ஆம் ஆண்டு, சித்திரை மாதம், 12 ஆம் திகதி, காலை 9.07 மணிக்கு விண்கலமான 'வொஸ்ரொக்-1' இல் தனது விண்வெளிப் பயணத்தை ஆரம்பித்தார்.

யூரி ககாரின் முதன்முதலாக விண்வெளியில் பூமியை வலம் வந்ததோடு, விண்வெளியில் பயணம் செய்த முதல் மனிதன் என்ற பெயரையும் பெற்றுக்கொண்டார்.



யூரி ககாரினுக்கு லெனின் விருதும், பொன் நட்சத்திரப் பதக்கமும் வழங்கப்பட்டன. 'சோவியத் யூனியனின் நாயகன்' என்ற கௌரவமும் அளிக்கப்பட்டது.

யூரி ககாரினுடைய பயணம் உலகம் முழுக்கப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதோடு, விண்வெளி அறிவியலில் ஒரு புதிய சகாப்தத்தையே உருவாக்கியது.விண்வெளி வரலாற்று வரிசையில் யூரி ககாரினின் சாதனை என்றும் நினைவு கூரத்தக்கது.

இந்த விண்வெளி வீரர் 1968 ஆம் ஆண்டு தனது 34 ஆவது வயதில் ஒரு விமானப் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது, விபத்தில் சிக்கிக் காலமானது பரிதாபத்துக்குரியது.

எச்.எம்.அஸ்லம்,
மட்/ஓட்டமாவடி தே.பாட.,



# அன்பின் மகத்துவம்

தமிழ் என்றால் அமுதம் என்கிறார்கள். அந்தவகையில், அமுதின் இனிமையைப் போன்ற வாழ்வியலின் அறக்கருத்துக்களையும் நெறிமுறைகளையும் திருக்குறள் மூலம் வழிகாட்டிச் சென்றார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

நம்மை மனிதனாக வாழ வைப்பது அன்பு. எமது வாழ்வில் சாந்தமும் சந்தோஷமும் சலசலத்து ஓடுவதற்கு அன்பு என்னும் அருவி அடித்தளமாக அமைய வேண்டும். அப்போதுதான் காடு, மேடு, பள்ளம் என அருவி கடந்து வருவது போல் வாழ்க்கைப் பாதையில் கஷ்டங்களைக் கடந்து முன்னேறிச் செல்ல முடியும். அனைத்து மதங்களும் அன்பையே வலியுறுத்துகின்றன. சமயக் குரவர்கள் இறைவனைத் தந்தையாக, எஜமானாக, நண்பனாக, குருவாக ஏற்று அன்பு செய்து இறையடி சேர்ந்து அன்பின் மகத்துவத்தை விளக்கியுள்ளனர். அன்பானது உள்ளத்தில் இருந்து இயற்கையாக ஊற்றெடுக்க வேண்டும்.

அன்பு என்பது மனித உயிர்கள் மீது மட்டும் செலுத்தப்படுவதன்று. பிற உயிர்கள் அனைத்திலும் காட்டப்பட வேண்டியது.

ஆர்.திருமகள்,
தரம் - 12,
க/கலைமகள் இந்து ம.க.,
தெல்தோட்டை.



# இளைஞனே நீ...

*இளைஞனே! நீ இன்று சிந்தும்*
*ஒவ்வொரு வியர்வைத் துளியும்*
*நாளை உன்னை உயர*
*வைக்கும் ஏணிப்படிகளடா!*

*தோல்வியின் ரணங்கள் உன்னை*
*தொடர்கின்றபோது*
*நம்பிக்கையின் கரங்களில் நீ*
*தவழ்ந்திடு வெற்றியின்*
*தாலாட்டுக் காத்திருக்கின்றது!*

*முயற்சியையும் நமபிக்கையையும்*
*பயணத்தின் பாதைகளாக*
*அமைத்து வீரநடை போடு*
*வெற்றியின் மகுடம் உன்னை*
*வந்தடையும் இது நிச்சயம்!*

ஜே.துள்சியாமேரி, தரம் - 9,
க/விக்னேஸ்வரா த.ம.வித்.,
பன்விலை.

# அவசரத்தால் ஆபத்து

சிறுவன் மணி தினமும் பஸ்ஸில் பாடசாலை செல்வது வழக்கம். அன்று பஸ்ஸில் கூட்டம் அதிகமாக இருந்தது. மாணவ-மாணவிகள் முண்டியடித்துக் கொண்டு பஸ்ஸில் ஏறினார்கள்.

நடத்துனர் விசில் கொடுத்தார். பஸ் நகர ஆரம்பித்தது. அப்போது மணி பஸ்ஸில் தொற்றிக்கொள்ள ஓடினான். அவனைப் பார்த்த ஒரு பெரியவர், ''தம்பி, ஏன் அவசரமாக ஓடுகிறாய்? பஸ்ஸில் கூட்டம் அதிகமாக இருக்கிறது. அடுத்த பஸ்ஸில் போ'' என்றார். மணியோ அவர் சொல்லைக் கேட்காமல் ஓடுகிற பஸ்ஸில் ஓடிப்போய் தொற்றினான். சரியாகப் பிடி கிடைக்காமல் விடவே, தவறித் 'தொப்' என்று கீழே விழுந்தான். பெரியவரும் பெண் ஒருவரும் சேர்ந்து மணியைப் பார்த்துப் பதறிப்போய், அவனை ஓர் ஆட்டோவில் ஏற்றிச்சென்று ஒரு மருத்துவமனையில் சேர்த்தனர்.



நல்லவேளை, சிறு சிறு காயங்கள்தான். ஆனால், அவனது காலில் பலமான உராய்வும் எலும்பு முறிவும் ஏற்பட்டிருந்தன. மருத்துவமனையில் மணியைப் பார்க்க அவன் நண்பர்கள் வந்தார்கள். அப்போது மணியை வைத்தியசாலையில் அனுமதித்த அப்பெரியவரும் அங்கு வந்தார். அவன் கால்கட்டு அகற்றப்படாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்து வருந்தினார்.

அப்போது, அப்பெரிய வர், ''பிள்ளைகளே, எப்போதுமே 8 மணிக்குப் பாடசாலை செல்ல வேண்டுமானால் 7 மணிக்கே கிளம்பிச் செல்ல வேண்டும். அப்போதுதான் நிதானமாகப் பாடசாலை போகலாம். கூட்டம் அதிகமாக இருந்தாலும் அடுத்த பஸ்ஸில் செல்லலாம்.

அவசரம் எப்போதும் ஆபத்தானது. பாதுகாப்பு இல்லாத நிலையில் பஸ்ஸில் தொற்றிக்கொள்ளக்கூடாது. அவரசப்பட்டால் ஆபத்தான நிலை எவருக்கும் ஏற்படலாம்'' என்று கூறினார். அவர் கூறிய உண்மையை எல்லாச் சிறுவர், சிறுமிகளும் நன்கு புரிந்து கொண்டனர்.

ஆர்.நித்தியதர்ஷினி,
தரம் - 10ஆ, கிரேக் த.ம.வித்.,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சை என்றால் பலருக்குப் பதற்றம் தானாகவே வந்துவிடும். பதற்றம் அதிகமானதும் படித்ததும் மறந்துவிடும். படித்ததெல்லாம் மறந்தபின் பரீட்சை எழுதும்போது பயம் வந்துவிடும். பரீட்சைக்குப் பயத்தால் எஞ்சிய நினைவிலுள்ள தகவல்கள்கூட மறந்துவிடும். இவ்வாறு, பரீட்சை நேரத்தில் குழப்பமடையும் சில மாணவர்கள் நன்கு படித்திருந்தும் பரீட்சையை நன்றாக எழுத முடியாத நிலையே காணப்படுகின்றது. எவ்வளவுதான் சிறப்பாகப் படித்திருந்தாலும் பரீட்சை நேரங்களில் ஏற்படும் குழப்பங்களையும் அதனைத் தவிர்க்கும் வழிமுறைகளையும் மாணவர்கள் முன்கூட்டியே அறிந்து கொள்வது நன்மையானது.





படித்த பாடங்களை திரும்பத் திரும்பப் படிப்பதன் மூலம் அந்தப் பாடத்தை எளிதாக மனதில் பதிய வைக்கலாம். பரீட்சை எழுதும் பொழுதெல்லாம் எந்தத் தகவல்கள் தேவைப்படுகின்றதோ, அப்போதெல்லாம் அவற்றை உபயோகித்துக் கொள்ள முடியும். பரீட்சைக்கு நீங்களே எழுதித் திருத்தி மதிப்பெண்களை வழங்கிக் கொள்ளலாம். இதன்மூலம் உங்களை நீங்களே மதிப்பிட்டுக் கொள்ளமுடியும்.

# பரீட்சையின்போது பதற்றம் வேண்டாம்



15 நாட்களுக்கு முன்பே, ஏற்கனவே படித்த பாடத்தைத் திரும்பவும் படிப்பது அவசியமாகும். இதற்குரிய நேரத்திட்டம் ஒன்றை வகுத்து ஒவ்வொரு நாளும் எவ்வளவு மணிநேரம் ஒரு பாடத்தைத் திரும்பப் படிக்க வேண்டும் என்பதை முன்கூட்டியே திட்டமிட்டுக்கொள்ள வேண்டும். நேரம் இருந்தால் கடந்த ஆண்டு நடந்த பரீட்சை வினாத் தாள்களில் இடம்பெற்ற வினாக்களுக்கான பதில்களை

சில மாணவர்கள் பரீட்சைக்கு முன்பு இரவு நேரங்களில் வெகு நேரம் கண் விழித்திருந்து படிப்பார்கள். தொடர்ந்து இவ்வாறு அதிக நேரம் படிப்பதன் மூலம் உடல் நிலை பாதிப்படையலாம். இதனால், சிலருக்குத் தீராத தலைவலி, கற்றவற்றை மறத்தல், காய்ச்சல் உடல் பலவீனம் என்பன ஏற்பட்டுப் பரீட்சை எழுத இயலாத நிலைகூட, சில நேரங்களில் ஏற்படலாம். எனவே, திட்டமிட்டு முன்கூட்டியே நேரத்திட்டத்தை வகுத்துக் கொள்வது மிகவும் அவசியமாகின்றது.

சிலரது பாடசாலை வெகு தூரத்தில் இருக்கலாம். பஸ்ஸில் பயணம் செய்யும்போது, சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேல் பயணம் செய்யவேண்டிய நிலை ஏற்படலாம். இவ்வாறு பயணம் செய்யும் நேரத்தைப் படிக்கும் நேரமாக மாற்றிக் கொள்ளலாம்.

அத்துடன், பரீட்சையில் அதிக புள்ளி எடுக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் சிலர் ஓய்வு எடுக்காமல் படிப்பார்கள். ஓய்வெடுப்பதற்கும் சிந்திப்பதற்கும் தகுந்த நேரத்தை ஒதுக்கத் தவறியவர்களுக்கு படிக்கும்போது குழப்பநிலை ஏற்படும் வாய்ப்புள்ளது. எனவே, தூக்கத்தை தியாகம் செய்வதைத் தவிர்த்து தேவையான அளவு தூங்குவதை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும். பரீட்சை நேரத்தில் அதிக நேரம் ஓய்வெடுக்கப் பலருக்கு நேரம் இருக்காது. எனவே, சிறிது நேரம் ஓய்வெடுத்து, பெரிய அளவில் புத்துணர்வு பெற சில பயிற்சிகளை உரிய முறையில் பழகிக் கொள்வது நலமாக அமையும்.

## விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 3861

மா.நாகதர்சிகன்,
தரம் - 3,
திருநாவுக்கரசு ம.வித்.,
வட்டுக்கோட்டை.



அங்.இல: 3862

எம்.ஜமால்தீன்,
தரம் - $4^{G}$,
சென்.மேரிஸ் மத்.கல்.,
பொகவந்தலாவ.



அங்.இல: 3863

சி.யுவன்ஸ்ரீ,
பாலர் வகுப்பு,
சுபீபீ பாலர் பாட.,
தலாத்துஓய.



அங்.இல: 3864

ம.விதூஷன்,
தரம் - $5^{D}$,
இந்துக் கல்.,
கொழும்பு.



அங்.இல: 3865

எஃப்.ரிப்கா,
தரம் - 6,
நாங்கல்ல மு.ம.வித்.,
கேகாலை.



அங்.இல: 3866

ஜொஸ்லின் கிங்ஸ்லி,
தரம் $6^{D}$,
சுண்டிக்குளி ம.கல்.,
யாழ்ப்பாணம்.



அங்.இல: 3867

சி.தமயந்தி,
தரம் - $7^{A}$,
முருங்கன் ம.வித்.,
மன்னார்.



அங்.இல: 3868

ஐ.மொஹம்மட்,
தரம் - $8^{A}$,
அரபா தே.பாட.,
வெலிகம.



அங்.இல: 3869

சி.பவிதா,
தரம் - 9,
இந்து ம.கல்.,
யாழ்ப்பாணம்.



அங்.இல: 3870

ஷியாமா ஃபர்வின்,
தரம் - 11,
அல்-அஸ்ஹர் மு.வித்.,
ஹெம்மாதகம.



அங்.இல: 3871

ம.உதயகுமார்,
தரம் - $11^{B}$,
விபுலானந்தா கல்.,
வவுனியா.



அங்.இல: 3872

எஃப்.ஃபஸில்,
தரம் - 11,
அந்நூரியா மு.ம.வித்.,
திருகோணமலை.

## மன்னார் மாணவர்களின் திறமைகளுக்கு களம் அமைத்த நெனகுண வெடும நிகழ்வுகள்

நெனகுண வெடும சுதிரிய தேசிய வேலைத்திட்டத்தின்கீழ் மாணவர்களுக்கான நிகழ்வுகள் இம்முறை மன்னார் மறை மாவட்டத்தில் நடைபெற்றன.

மன்/உயிலங்குளம் ரோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை, மன்/உயிர்த்தராசன்குளம் றோ.க.தமிழ் கலவன் பாடசாலை, மன்/இலகற்பிட்டி றோ.க.பாடசாலை, மன்/தோட்டவெளி அரசினர் த.க.பாடசாலை, மன்/அரிப்பு றோமன் கத்தோலிக்க த.க.பாடசாலை ஆகிய பாடசாலை மாணவர்கள் இந்நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்தனர்.





மாணவர்களின் கலைத்திறன், ஆடல், பாடல் மற்றும் நாடகங்கள், பேச்சு, கவிதை, நகைச்சுவை என பலதரப்பட்ட திறமைகளை வெளிப்படுத்துவதற்கும், புரிந்துணர்விற்கும் இந்த நிகழ்வு களம் அமைத்துக் கொடுத்தது.




இந்நிகழ்வில் உரையாற்றிய மாணவியொருவர் மேற்படி நெனகுண வெடும நிகழ்ச்சித் திட்டமானது தமக்குத் தலைமைத்துவப் பண்பினை வெளிக்கொணர்வதற்கு உந்துசக்தியாக இருந்ததாகவும் தாம் இந்த தேசிய வேலைத்திட்டத்தை மிகவும் விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மனித உருவங்களின் அவயவங்கள், முகத்தோற்றம் என்பன பற்றிக் கடந்த இதழ்களில் கற்றோம். அந்த வரிசையில் இந்தப் பாடத்தில் மெலிந்த உடல்வாகினைப்பெற்ற பெண், ஆண் உடற்தோற்றங்களை பல்வேறு கோணங்களில் வரைவது குறித்து நோக்குவோம்.



தர்கா நகரைச் சேர்ந்த ஜெஸ்மின்-ஹஸனியா தம்பதியரின் செல்வப் புதல்விகளான பாத்திமா ஸாரா, பாத்திமா ஸப்னா ஆகியோர் 22.11.2010 அன்று தமது மூன்றாவது பிறந்தநாளைக்



கொண்டாடினர். இவர்களைப் பெற்றோர் உட்பட, உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல்: ஹஸ்மத் ஜெஸ்மின்)*



கல்பிட்டி, அல்-மனாரைச் சேர்ந்த முபாரக்-றிஸானா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹமட் முஸ்தாக், 23.11.2010 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

ஹபுகஸ்தலாவையைச் சேர்ந்த நஜிம்-ஹிதாயா தம்பதியரின் செல்வப் புதல்வன் இஸ்ஸத் அகமத், 27.11.2010 அன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருள் பெற்று, பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்.





கலேவெலயைச் சேர்ந்த அஸ்மிர்-நஸ்மிலா தம்பதியரின் செல்வப் புதல்வி அஸிரா, 10.11.2010 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை பெற்றோர், உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.




சாவகச்சேரி, சங்கத்தானையைச் சேர்ந்த ராஜகாந்தன்-சுதா தம்பதியரின் செல்வப் புதல்வன் புருசோத்மனன், 21.11.2010 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் இறைவனின் அருள்பெற்று, நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

*(தகவல்: ம.தனுக்ஷன்)*





எம்.அஸ்கர், தரம் - 4A,
கம்பளை தே.பாட., கம்பளை.



எஃப்.நஸ்லா, உயர் தரம்,
அல்-அஸ்ஹர் மத்.கல்.,
தெஹியங்க.




அன்டன் ரொமேஸ்,
தரம் - 9, ஊவா விஞ்ஞானக் கல்.,
பதுளை.






எஃப்.ஸைனியா, தரம் - 10,
தெலம்புகல்ல மு.வித்.,
குருணாகலை.



எம்.ஹரினி, தரம் - 2B,
கதிரேசன் இ.ம.கல்., நாவலப்பிட்டி.



ச.டெலக்சனா, தரம் - 8A,
வேம்படி ம.உயர் தரப் பாட.,
யாழ்ப்பாணம்.



எம்.அஸ்பான், தரம் - 7A,
அல்-தாரிக் மு.ம.வித்., கந்தளாய்.



எஸ்.ஸைனம், தரம் - 6B,
அரபா மு.ம.வித்., தவுளகல.



எஸ்.பிள்கான், தரம் - 3B,
யாழ்.இந்துக் கல்.,
யாழ்ப்பாணம்.



எம்.ஃபயாஸ், தரம் - 7B,
பரகஹாதெனிய தே.பாட.,
குருணாகலை.



மெவனி குரோரியா, தரம் - 5,
ஹைலெவல் சர்வதேச பாட.,
ஹட்டன்.



த.லக்ஷன்,
தரம் - 9H, தமிழ் மத்.ம.வித்.,
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபிலன், படிப்பறிவு' இல்லாதவன். எப்போதும் ஊர் சுற்றுவதிலேயே காலத்தைக் கழித்தான். ஒருநாள் அவனது தந்தை திடீரென இறந்துவிட்டார். அந்தத் துக்கத்தில் அவனது தாயும் சில நாட்களில் இறந்துவிட்டார். பெற்றோரை இழந்த கபிலன், மனம் போனபடி ஊர் ஊராய்ச் சுற்றி ஒரு பெரிய நகரத்தை அடைந்தான். அங்கு வழிப்போக்கர்களுக்கு உணவு வழங்குவதற்காக சத்திரமொன்று இருந்தது. கபிலன் அந்த சத்திரத்தில் தங்கினான்.

ஒரு பெண், சத்திரத்தில் வந்து தங்குபவர்களுக்கு உணவு சமைத்துப் போடுவாள். கபிலனை அவளுக்குப் பிடித்துப்போய்விட்டது. கபிலனும் அவளை விரும்பினான். இருவரும் ஒரு கோவிலில் திருமணம் செய்து கொண்டனர். அந்தப் பெண்ணின் வருமானத்தில்தான் குடும்பம் நடத்தினர். கபிலன் வேலைக்குச் செல்லாமல் வீட்டிலேயே முடங்கிக் கிடந்தான். கணவனை வேலைக்குச் செல்லும்படி நச்சரித்தாள் மனைவி. 'செவிடன் காதில் ஊதிய சங்கு போல' சட்டை செய்யாமல் இருந்தான் கபிலன்.

இந்நிலையில் அந்த ஊர் கோவிலின் உற்சவ விழா வந்தது. அந்த விழாவின் போது புதிய ஆடை அணிய விரும்பினாள் கபிலனின் மனைவி. அந்த நாட்டு மன்னர், தினமும் காலையில் யார் தன்னை முதலில் காண்கிறார்களோ, அவர்களுக்கு ஐந்து பொற்காசுகள் கொடுப்பதாக அறிந்தாள்



# ஆசைக்கு அளவில்லை

கபிலனின் மனைவி. அதிகாலையில் அரசரைக் கண்டு, அந்தப் பொற்காசுகளையாவது வாங்கி வரும்படி தன் கணவனிடம் கூறினாள்.

மனைவியின் தொல்லை தாங்க முடியாத கபிலன், நடு இரவிலேயே அரண்மனைக்குச் சென்றுவிட்டான். அங்கிருந்த காவலர்கள் அவனைத் திருடன் என எண்ணி நன்றாக அடித்து, ஒரு மரத்தில் கட்டி வைத்தனர். விடிந்ததும் அவனை இழுத்துக்கொண்டு போய் மன்னர் முன் நிறுத்தினர். கபிலனின் அப்பாவித்தனமான முகத்தைப் பார்த்த மன்னன், இவன் திருடனாக இருக்க முடியாது என்று நினைத்தார். கபிலனிடம் விபரம் கேட்க, அவன் நடந்தவற்றைக் கூறினான். அவன் மீது இரக்கம் கொண்ட மன்னர், ''கபிலா, உனக்கு என்ன வேண்டுமோ கேள்... தருகிறேன்'' என்றார்.

'என்ன கேட்கலாம்?' என்று மனதில் யோசனை செய்தபடியே தன்னைக் கட்டியிருந்த மரத்தின் அடியில் அமர்ந்தான், கபிலன். ஐந்து பொற்காசுகள் வேண்டாம், பத்து காசுகள் கேட்லாம். இல்லை.... இல்லை... இருபது காசுககள் கேட்கலாம். அப்போதும் அவன் ஆசை அடங்கவில்லை. கோடி பொற்காசுகள் வேண்டாம். மன்னர் தான் என்ன வேண்டுமானாலும் கேட்கச் சொன்னாரே.. இந்த நாட்டைக் கேட்கலாம். அதுதான் சரி, நாட்டைத்தான் கேட்க வேண்டும் என்று உறுதி செய்து கொண்டான்.

அப்போது அவன் அமர்ந்திருந்த மரத்திலிருந்து ஒரு பழம், அவன் தலைமீது விழுந்தது. அது ஒரு அத்திப்பழம். அதை எடுத்து பிய்த்துப் பார்த்தான். உள்ளே சொத்தையாக இருந்தது. அழகான சிவந்த நிறமுடைய பழம் இப்படி இருக்கிறதே... என்று நினைத்த அவன் மனதில், நாட்டைக் கேட்க வேண்டும் என்ற எண்ணம் போய்விட்டது. 'இந்த உலகையே கொடுத்தாலும், அதற்கு மேலும் கேட்கத்தான் செய்யும்' என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியது.

'ஆசைக்கு அளவே கிடையாது' என்ற உண்மையை அறிந்த கபிலன், மன்னனிடம் சென்றான்.

''அரசே, மனிதர்களின் ஆசைக்கு எல்லையே இல்லை என்பதை அறிந்து கொண்டேன். தாங்கள் எனக்கு மாட மாளிகைகள், பொற்காசுகள், ஏன் இந்த நாட்டையே தந்தாலும் எனது ஆசை தீர்ந்து விடாது. எனவே, இந்த ஆசை எனும் தீயை அணைக்க முடிவு செய்துவிட்டேன். இனி நான் உழைத்து, அதன் மூலம் கிடைக்கும் பொருளைக்கொண்டு வாழவே ஆசைப்படுகிறேன்'' என்று கூறிவிட்டுத் தன் வீட்டை நோக்கிச் சென்றான் கபிலன்.




# இனிமை தராத பனிக்காலம்

புகைபோக்கித் துடைப்பானைவிட, மோசமாகப் புகைக்கரி படிந்திருந்தது அதன் மேல்.

''என்ன செய்கிறாய் நீ, யாஷா? இப்படிக் கண்மூடித்தனமாகச் செய்து என்னைச் சாகடிக்க நினைக்கிறாயா?'' என்று இரைந்தது'' சிட்டுக்குருவி.

''நீ புகைபோக்கியில் உட்கார்ந்திருந்தது எனக்கு எப்படித் தெரியும்?''

''இனிமேலாவது விழிப்போடு இரு. நான் உன் மண்டையில் இரும்புக் குண்டால் இடித்திருந்தால் எப்படி இருந்திருக்கும்.....

முள்மீன் சுள்ளானுக்கும் பனிக்காலம் இனியதாக இல்லை. அது அதிக ஆழமான இடத்துக்குச் சென்று நாள் முழுவதும் தூங்கி வழிந்தது. ஒரே இருட்டும் குளிரும். அசையவே பிடிக்கவில்லை. எப்போதாவது, சிட்டுக்குருவி கூப்பிட்டால் அது பனிப்பாளத் துளையின் பக்கம் நீந்திப் போயிற்று. சிட்டுக்குருவி பனிப்பாளத் துளைக்குப் பறந்து வந்து தாகந்தீரத் தண்ணீர் குடித்தது. பின்பு ''டேய், முள்மீன் சுள்ளான், உயிரோடுதான் இருக்கிறாயா?'' என்று கேட்டது.

''உயிரோடுதான் இருக்கிறேன். ஆனால், தூக்கம்தான் ஓயாமல் வருகிறது. மொத்தத்தில் படு மோசம். இங்கே எல்லோரும் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள்'' என்று தூக்கக் கலக்கத்தில் பதில் சொல்லிற்று முள்மீன்.

''எனது இருப்பிடத்திலும் நிலைமை அவ்வளவு நன்றாக இல்லை. என்ன செய்வது, பொறுத்துக்கொள்ள வேண்டியதுதான்... ஐயோ, எவ்வளவு கொடுமையான குளிர் அடிக்கிறது தெரியுமா? தூங்குவது என்ற பேச்சுக்கே இடமில்லை. சூடேற்றிக் கொள்வதற்காக நான் ஓயாமல் ஒற்றைக்காலில் தத்திக் கொண்டிருக்கிறேன். ஆனால், மனிதர்கள் என்னைப் பார்த்துவிட்டு, ''எவ்வளவு குதூகலமாக இருக்கிறது தெரியுமா? சிட்டுக்குருவி என்று வேறு சொல்கிறார்கள். ஆகா, வெயில் காலம் வந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அட நீ என்ன சுள்ளான், மறுபடியும் தூங்கி விட்டாயா?'' என அலுத்துக்கொண்டது சின்னச் சிட்டுக்குருவி.

கோடையில் ஒருநாள் புகைபோக்கித் துடைப்பான் தன் வேலையை முடித்துவிட்டு, புகைக்கரியைக் கழுவிப் போக்கிக்கொள்வதற்காக ஆற்றுக்குப் போனான். சீழ்க்கை அடித்துக் கொண்டே நடந்தவன், திடீரென்று காச் மூச் என்ற கூச்சலைக் கேட்டான். என்ன நடந்தது? வாத்துக்களும் தாராக்களும் தூக்கணாங் குருவிகளும் உள்ளான்களும் சிட்டுக்குருவிகளும் புறாக்களும் ஆற்றுக்கு மேல் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. எல்லாமே கத்துவதும் கூச்சல் போடுவதும் கெக்கரிப்பதுமாக இருந்தன. விடயம் என்ன என்றே விளங்கவில்லை.

''ஏ பறவைகளா, என்ன நடந்தது?'' என்று கத்தினான் புகைபோக்கித் துடைப்பான்.

''என்ன நடந்ததா?'' என்று கேலியாகக் கிரீச்சிட்டது துடிப்பான நீலச்சிட்டு,

''ஒரே வேடிக்கைதான் போ! நம்முடைய சின்னச் சிட்டுக்குருவி என்ன செய்கிறது என்று பார்... அதற்கு வெறி பிடித்து விட்டது'' நீலச் சிட்டு மெல்லிய கீச்சுக் குரலில் சிரித்தது, வாலை வேறு நெளித்தது. பின்பு ஆற்றுக்கு மேல் வட்டமிடலாயிற்று.

''ஏய் சிட்டுக்குருவி, இங்கே என்ன பிரச்சினை?'' என்று கேட்டான் புகைபோக்கித் துடைப்பான். சிட்டுக்குருவி கோபத்துடன் கத்தியது..... ''இல்லை, இல்லை நான் அதற்குக் கற்பிக்கிறேன் சரியான பாடம்'' என்று இரைந்தது.

வன்மத்தால் அதற்கு மூச்சுத் திணறிற்று.

''நான் எப்பேர்ப்பட்டவன் என்று அது இனித் தெரிந்து கொள்ளும். பாழாய்ப் போன முள்மீன் சுள்ளானுக்குக் காட்டுகிறேன் பார்! என்னை நினைவு வைத்துக் கொள்ளும்படி செய்கிறேன். அந்தக் கொள்ளைக்காரப் பாவியை''

''இதன் பேச்சைக் கேட்காதே! இது சொல்வது எல்லாம் பொய்'' என்று நீரில் இருந்தபடியே புகைபோக்கித் துடைப்பானிடம் சொல்லிற்று முள்மீன் சுள்ளான்.

''நான் சொல்வது பொய்யா?'' என்று கூப்பாடு போட்டது சிட்டுக் குருவி. ''புழுவைத் தேடி எடுத்தது யார்? நான் சொல்வது பொய்யாம்.. அருமையான, கொழுத்த புழு! என்ன பாடு பட்டுக் கரையில் இருந்து தோண்டி எடுத்தேன். அதைக் கொத்திக் கூட்டுக்குக் கொண்டு போகப் புறப்பட்டேன். எனக்குக் குடும்பம் இருக்கிறதே. நான் இரை கொண்டு போக வேண்டும். புழுவைக் கொத்தியபடி ஆற்றுக்கு மேலே சிறகடித்துக் கொண்டிருந்தேன். அப்போது, இந்தப் பாழும் சுள்ளான், இதைப் பைக் மீன் விழுங்க 'பருந்து, பருந்து' என்று கத்திற்று. நான் பயந்து போய் அலறினேன். அப்போது, புழு நீரில் விழுந்து விட்டது. இந்த முள்மீன் சுள்ளான் அதை விழுங்கிவிட்டது. பொய் சொல்வது நானா? உண்மையில் பருந்து வரவேயில்லை''

புகைபோக்கித் துடைப்பான் கரையில் குந்தியவாறே, பக்கத்தில் இருந்த நாணல் புதர் மேல் சாப்பாட்டு முடிச்சை வைத்துவிட்டு, கைகளையும் முகத்தையும் கழுவிக் கொண்டான். பின்னர் சொன்னான், ''நல்லது நண்பர்களே! இப்போது உங்கள் வழக்கை விசாரிப்போம்... இந்தா, சுள்ளான் நீ மீன். சிட்டுக்குருவி நீ பறவை. சரிதானே நான் கூறுவது?''

''சரிதான், சரிதான்'' என்று கத்தின எல்லாப் பறவைகளும் மீன்களும், ''மேலே பேசுவோம். மீன் நீரில் வசிக்க வேண்டும். பறவை காற்றில் பறக்க வேண்டும். சரிதானே நான் கூறுவது? சரி நல்லது... புழுவோ, மண்ணில் வசிக்கிறது. இப்போது பாருங்கள்...'' புகைபோக்கித் துடைப்பான் தன் முடிச்சை அவிழ்த்து, ரைதானிய ரொட்டித் துண்டு ஒன்றைப் பாறை மேல் வைத்தான். அவனுடைய மதியச் சாப்பாடு அந்த ரொட்டித் துண்டு மட்டுந்தான் என்று அவன் கூறினான்.

''இதோ பாருங்கள், இது என்ன? இது ரொட்டி. நான் இதை உழைத்துச் சம்பாதித்தேன், நான் இதை உண்பேன். இதை உண்டு நீர் குடிப்பேன். அதாவது, மதியச் சாப்பாடு சாப்பிடுவேன். யாருக்கும் நான் கெடுதல் செய்ய மாட்டேன். மீனும் பறவையும்கூடச் சாப்பிட விரும்புகின்றன. உங்களுடைய தீனி தனி வகை! ஆகவே, சச்சரவு எதற்காக? சிட்டுக்குருவி புழுவைத் தோண்டி எடுத்தது என்றால் அதை உழைத்துச் சம்பாதித்தது என்று ஆகிறது. புழு அதற்குச் சொந்தம் என்றும் ஆகிறது...''

''பொறுங்கள், மாமா....'' என்று பறவைக் கூட்டத்திலிருந்து வந்தது மெல்லிய குரல் ஒன்று.

பறவைகள் விலகி, உள்ளான் குருவிக்கு வழிவிட்டன. அது மெல்லிய தன் கால்களால் நடந்து புகைபோக்கித் துடைப்பான் அருகில் போயிற்று.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

இன்றைய பாடத்தில் ராஜாவுக்கும் கமலுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

රාජා: **ආයුබෝවන් කමල්. කොහොමද සැප සනීප?**
ஆயுபோவன் கமல். கொஹொமத செப சனீப?
ராஜா: வணக்கம் கமல். எப்படி சுகம்?

කමල්: **ආයුබෝවන්. හොඳ සනීපෙන් ඉන්නවා.**
ஆயுபோவன். ஹொந்த சனீபென் இன்னவா.
கமல்: வணக்கம். நல்ல சுகமாக இருக்கிறேன்.



**ඔයාව දැකලා හුඟ කල්.**
ஒயாவ தெகளா ஹுங்க கள்.
அதிக நாட்களாக உங்களைக் காணவில்லை.

රාජා: **මම කොළඹ අතහැරල ගිහින් අවුරුද්දක් වෙනවනේ.**
மம கொழம்ப அதஹெரல கிஹின் அவுருத்தக் வெனவனே?
ராஜா: நான் கொழும்பில் இருந்து வெளியேறி ஒரு வருடம் ஆகின்றது.

කමල්: **දැන් කොහේද ඉන්නේ?**
தென் கொஹேத இன்னே?
கமல்: இப்போது எங்கே இருக்கிறீர்கள்?

රාජා: **මම බණ්ඩාරවෙල වෙළඳාම් කරනවා.**
மம பண்டாரவெள வெளந்தாம் கறனவா.
ராஜா: நான் பண்டாரவளையில் வியாபாரம் செய்கின்றேன்.

කමල්: **එහේ මොනවද වෙළඳාම් කරන්නේ?**
எஹே மொனவத வெளந்தாம் கறன்னே?
கமல்: அங்கே என்ன வியாபாரம் செய்கிறீர்கள்?

රාජා: **තේ කොළ . එළවළු තමා.**
தே கொள - எளவளு தமா.
ராஜா: தேயிலை - மரக்கறிதான்.

කමල්: **මෙහාට ආවේ කවදාද?**
மெஹாட ஆவே கவதாத?
கமல்: இங்கே எப்போது வந்தீர்கள்?



රාජා: **සෙනසුරාදා නංගිත් එක්ක ආවේ.**
செனசுராதா நங்கித் எக்க ஆவே.
ராஜா: சனிக்கிழமை தங்கையுடன் வந்தேன்.

කමල්: **ඔයාලා නැවතිලා ඉන්නේ කොහේද?**
ஒயாலா நெவதிலா இன்னே கொஹேத?
கமல்: நீங்கள் எங்கே தங்கியிருக்கிறீர்கள்?

රාජා: **නුවර අපේ මාමාගේ ගෙදර.**
நுவர அபே மாமாகே கெதற.
ராஜா: கண்டியில் எமது மாமாவின் வீட்டில்.

කමල්: **එහෙනම් වෙලාවක අපේ ගෙදර එන්න. මෙන්න මගේ ලිපිනය.**
எஹெனம் வெளாவக அபே கெதற என்ன. மென்ன மகே லிபினய.
கமல்: அப்படியென்றால் ஒரு நாளைக்கு எங்கள் வீட்டிற்கு வாருங்கள்.
இதோ என்னுடைய முகவரி.

රාජා: **හොඳයි කමල්, අපි එන්නම්.**
ஹொந்தய் கமல், அபி என்னம்.
ராஜா: நல்லது கமல், நாங்கள் வருகின்றோம்.

## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

*உதாரணம்:* அதிக நாட்களாக உங்களைக் காணவில்லை.
**ඔයාව දැකලා හුඟ කල්.**

i. கொழும்பிலிருந்து வெளியேறி ஒரு வருடம் ஆகின்றது.
..............................................................................

ii. நான் வியாபாரம் செய்கின்றேன்.
..............................................................................

iii. கண்டியில் எமது மாமாவின் வீட்டில்.
..............................................................................






நிகழ்காலத் தொடர் வாக்கியத்துடன் (Present Continuous Tense), நிகழ்கால வினை முற்றுத் தொடர் வாக்கியத்தை (Present Perfect Continuous Tense) மேலும் உதாரணங்களுடன் ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) He is living in Colombo now.
அவன் இப்பொழுது கொழும்பில் வசித்துக்கொண்டு இருக்கின்றான்.

(ஆ) He has been living in Colombo since 1999.
1999 ஆம் ஆண்டில் இருந்து அவன் கொழும்பில் வசித்து வருகின்றான்.

(அ) He is living.
அவன் வசித்துக்கொண்டு இருக்கின்றான்.
(நிகழ்காலத் தொடர் வாக்கியம் - Present Continuous Tense)

(ஆ) He has been living.
அவன் வசித்து வருகின்றான்.
(நிகழ்கால வினைமுற்றுத் தொடர் வாக்கியம் -
(Present Perfect Continuous Tense)

(இ) She is teaching in a government school now.
அவள் இப்பொழுது ஓர் அரசாங்கப் பாடசாலையில் கற்பித்துக்கொண்டு இருக்கின்றாள்.

(ஈ) She hes been teaching in that school for the last five years.
கடந்த ஐந்து வருடங்களாக, அவள் அந்தப் பாடசாலையில் கற்பித்து வருகின்றாள்.

(இ) She is teaching.
அவள் கற்பித்துக்கொண்டு இருக்கின்றாள்.
(நிகழ்காலத் தொடர் வாக்கியம் - Present Continuous Tense)

(ஈ) She has been teaching.
அவள் கற்பித்து வருகின்றாள்.
(நிகழ்கால வினைமுற்றுத் தொடர் வாக்கியம் - Present Perfect Continuous)

(உ) This company is manufacturing cars now.
இந்த ஸ்தாபனம் இப்பொழுது கார்களை உற்பத்தி செய்துகொண்டு இருக்கின்றது.

(ஊ) It has been manufacturing cars since 1998.
அது 1998 ஆம் ஆண்டில் இருந்து கார்களை உற்பத்தி செய்து வருகின்றது.

(உ) This company is manufacturing.
இந்த ஸ்தாபனம் உற்பத்தி செய்துகொண்டு இருக்கின்றது.
(நிகழ்காலத் தொடர் வாக்கியம் - Present Continuous Tense)

(ஊ) This company has been manufacturing.
இந்த ஸ்தாபனம் உற்பத்தி செய்து வருகின்றது.
(நிகழ்கால வினைமுற்றுத் தொடர் வாக்கியம் -
(Present Perfect Continuous Tense)

(எ) It is raining now.
இப்பொழுது மழை பெய்துகொண்டு இருக்கின்றது.

(ஏ) It has been raining since last night.
கடந்த இரவில் இருந்து மழை பெய்து வருகின்றது.

(எ) It is raining.
மழை பெய்துகொண்டு இருக்கின்றது.
(நிகழ்காலத் தொடர் வாக்கியம் - Present Continuous Tense)

(ஏ) It has been raining.
மழை பெய்து வருகின்றது.
(நிகழ்கால வினைமுற்றுத் தொடர் வாக்கியம் -
(Present Perfect Continuous Tense)

**(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்



✱ சித்தார் இசைக்கருவியை வாசிப்பதில் உலகப் புகழ் பெற்ற கலைஞர் யார்?

**ரவிஷங்கர்**



✱ இலக்கியத்திற்கான நொபெல் விருதினை முதல் தடவையாக வென்ற ஆங்கிலேயர் யார்?

**ரூட்யார்ட் கிப்ளின்**



✱ ஆத்தர் சி.கிளார்க் எந்தப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக கடமையாற்றினார்?

**மொரட்டுவை பல்கலைக்கழகம்**



✱ உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான மக்கள் வசிக்கின்ற தீவு எது?

**இந்தோனேஷியா**



✱ 'ஹொக்கி' விளையாட்டுச் சங்கம் முதன்முதலாக எந்த நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது?

**இங்கிலாந்து (1857 ஆம் ஆண்டு)**

✱ நவீன ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்ட இடம்? வருடம்?

**எதென்ஸ் (1866 ஆம் ஆண்டு ஏப்ரல் 5-16)**



✱ முதலாவது உலகக் கிண்ண குத்துச்சண்டைப் போட்டிகள் நடைபெற்ற நாடு எது?

**கியூபா (ஹவானா)**



✱ சுனாமி தமிழில் எவ்வாறு குறிப்பிடப்படுகின்றது?

**கடற்கோள்**

✱ மிருகங்களுக்கென சரணாலயம் அமைக்கப் பட வேண்டும் என்ற யோசனையை முன்வைத்தவர் யார்?

**எஸ்.ஹொக்கா**



✱ சீனப் பெருஞ்சுவரின் நீளம்?

**2400 கி.மீற்றர்**



✱ உலகின் முதலாவது பூங்காவாக கருதப்படுவது?

**யெலோ டொஸ் தேசிய பூங்கா**




✱ சிங்கப்பூர் ஜப்பானினால் எப்போது கைப்பற்றப்பட்டது?

**1942 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம்**

✱ நவீன வங்கியியல் முறை எந்த நாட்டில், எத்தனையாம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது?


**1587 இல், வெனிஸில்**




✱ 'கூகுல்' இணைய சேவைக்கு இணையாக அதிக பிரபல்யத்தைப் பெற்ற இணைய சேவை எது?

**ஃபேஸ் புக்**

✱ உலகிலேயே மிக நீளமான நிலக்கீழ் சுரங்கப்பாதை எங்கே அமைக்கப்படுகின்றது? அதன் நீளம் எவ்வளவு?



**சுவிட்ஸர்லாந்தின் 'அல்ஃப்ஸ்' மலைத்தொடரின் கீழ் பகுதியில் நீளம் - 57 கி.மீற்றர்**

✱ 16 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் எந்த நாட்டில் நடைபெற்றது?

**சீனா, பீய்ஜிங் நகரில் (2010)**







## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# "எவர்மீதும் ஆத்திரம் இல்லை" விடுதலையான 'சூகி' தெரிவிப்பு

மியன்மாரில் சிறை வைக்கப்பட்டிருந்த அந்நாட்டின் ஜனநாயகக் கட்சியின் தலைவியான ஆன் சாங் சூகி கடந்த 13 ஆம் திகதியன்று இராணுவ ஆட்சியாளர்களால் விடுதலை செய்யப்பட்டதையடுத்து, ஏராளமான அவரது ஆதரவாளர்கள் அவரை மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்றனர்.





ஆதரவாளர்களின் முன் உரையாற்றிய சூகி "நம்பிக்கையை கைவிடவோ, மனம் தளரவோ வேண்டாம்" என்றும் "எவர் மீதும் தாம் ஆத்திரம் கொள்ளவில்லை" என்றும் ஐக்கிய உணர்வுடன் செயற்படுவோம் என்றும் தெரிவித்துள்ளார்.



தற்போது, சூகிக்கு வயது 65. கடந்த 20 வருடங்களில் 15 வருடங்களை வீட்டுக்காவலிலேயே அவர் கழித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மியன்மாருக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்த ஜெனரல் அவுன் சானின் மகளே சூகி ஆவார்.

1989 ஆம் ஆண்டு அவசரகால சட்டத்தின்கீழ் சூகி இராணுவத்தினால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். இருப்பினும், 1990 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் சூகியின் ஜனநாயகக் கட்சி 485 நாடாளுமன்ற ஆசனங்களில் 392 ஆசனங்களை வெற்றியீட்டியிருந்தது. ஆனால், இராணுவமோ சூகியின் வெற்றியை ஏற்க மறுத்து ஆட்சி அமைப்பதற்கு அவருக்கு இடம் கொடுக்கவில்லை. தொடர்ந்து 1991 ஆம் ஆண்டு சூகிக்கு சமாதானத்திற்கான 'நொபெல்' விருது வழங்கப்பட்டது.

உலக நாடுகளின் தலைவர்கள், சமயத் தலைவர்கள் என பலரும் வேண்டுகோள் விடுத்துவந்த போதிலும், சூகியை தொடர்ந்து வீட்டுக்காவலிலேயே இராணுவ ஆட்சியாளர்கள் வைத்திருந்தனர்.

இத்தகைய பின்னணியிலேயே இந்த வருடம் நொவெம்பர் 7 ஆம் திகதி மியன்மாரில் மீண்டும் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. எனினும், இந்தத் தேர்தலில் சூகி போட்டியிட முடியாதவாறு தேர்தல் சட்டங்கள் மாற்றி அமைக்கப்பட்டிருந்தமையால், இதற்கு எதிர்ப்பைக் காட்டும் வகையிலும், தேர்தல் நியாயமாக நடைபெறாது என்பதை சுட்டிக்காட்டியும் சூகியின் ஜனநாயகக் கட்சி இம்முறை தேர்தலில் போட்டியிடவில்லை. அதன்படி, நடைபெற்ற தேர்தலில் இராணுவத்தின் பிரதிநிதிகள் 80 வீத ஆசனங்களைப் பெற்று ஆட்சி அமைத்துள்ளனர். இதனைத் தொடர்ந்தே ஆன் சாங் சூகி விடுதலை செய்யப்பட்டுள்ளார். சூகியின் அடுத்தகட்ட ஜனநாயக நகர்வு எப்படி அமையப்போகின்றது என்பதையிட்டே உலகம் தற்போது அவதானித்து வருகின்றது.

## சீனாவில் அரசியல் சுதந்திரம் அவசியம்

சீனாவில் அரசியல் சுதந்திரம் இன்னும் முன்னேற்றமடைய வேண்டிய நிலையிலேயே இருப்பதாக பிரிட்டன் பிரதமர் டேவிட் கெமருன் தெரிவித்துள்ளார். சீனாவிற்கான விஜயத்தின்போது, அந்நாட்டின் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

சீனாவின் பொருளாதாரம் உயர்ச்சி கண்டு வருகின்றது. அவ்வாறே, அரசியல் ரீதியிலும் முன்னேற்றம் காண வேண்டியுள்ளது. அப்போதுதான் ஒரு நாடு என்ற ரீதியில் சீனா முழுமையைப் பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## பிரான்ஸ் பிரதமர் பதவி விலகல்

பிரான்ஸ் நாட்டின் பிரதமர் ஃபென்ஸுவா ஃபிஸான் உட்பட, இன்னும் சில அமைச்சர்களும் தமது பதவியிலிருந்து சுயவிருப்பில் விலகியுள்ளனர். பிரதமரின் பதவி விலகலை ஜனாதிபதி நிக்கலஸ் சார்கோஸி ஏற்றுக்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## அற்லஸ் கேள்வி - 283

**கேள்வி:** மியன்மாரில் ஆன் சாங் சூகி எத்தனை வருடங்கள் வீட்டுக்காவலில் இருந்தார்?

சரியான விடை.........................................

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே உலகைக் காண்போம், கேள்வி - 283, விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

## போட்டி இல - 281 இன் சரியான விடை: 21 வருடங்கள்

**பரிசு பெறுவோர்**

அ.வலீத்,
20, கோட் வீதி, திருகோணமலை.

வி.இராகவன்,
மே/பா சி.சிவப்பிரகாசம்,
தொல்புரம் மத்தி, சுழிபுரம்.

ஏ.கஜன்,
ஹேனமுல்ல கேம்ப், மாதம்பிட்டி வீதி, கொழும்பு-15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய போட்டிகள் நிறைவை நோக்கி...

சீனாவில் 16 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் கடந்த 12 ஆம் திகதி கோலாகலமாக ஆரம்பமாகி நிறைவு தினத்தை நெருங்கி வருகின்றது. 4 ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெறுகின்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகள் இறுதியாக கடந்த 2006 ஆம் ஆண்டில் டோஹா கட்டாரில் நடைபெற்றது.

இம்முறை போட்டிகள் சீனாவின் பீஜிங் நகரில் 27 ஆம் திகதி நிறைவு பெறவுள்ளன.

42 போட்டிகளில் 476 தங்கப் பதக்கங்கள் வழங்கப்படுகின்ற, இந்த ஆசியப் போட்டிகளில் முதல் தடவையாக கிரிக்கெட் போட்டிகள் நடைபெறுகின்றமை சிறப்பம்சமாக அமைந்துள்ளது. ஆசியாக் கண்டத்தின் 45 நாடுகள் சார்பாக, 10 ஆயிரம் வீர, வீராங்கனைகள் இப்போட்டிகளில் கலந்து கொள்கின்றனர். இதற்கு முன்னர் 1990 ஆம் ஆண்டிலும் சீனாவில் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# ‘ஏஷஸ்’ கிண்ணத்தில் ஆஸி அணி சாதிக்குமா?





அவுஸ்திலேயா-இங்கிலாந்து அணிகளுக்கிடையே 25 ஆம் திகதி ‘ஏஷஸ்’ டெஸ்ட் தொடர் ஆரம்பமாகின்றது. இரண்டு அணிகளும் மொத்தமாக 5 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளன.

இரண்டு நாடுகளினது ரசிகர்களின் எதிர்பார்ப்பைக் கொண்டுள்ள ‘ஏஷஸ்’ கிண்ணப் போட்டிகளில் ஒரு காலத்தில் ஜாம்பவானாக இருந்த அவுஸ்திரேலிய அணி அண்மைக்காலமாக, மிகுந்த பின்னடைவைக் கண்டுள்ளது. ஏற்கனவே சர்வதேச தர வரிசையிலும் பின்னடைவு நிலையில் உள்ள அவுஸ்திரேலியா இந்த ‘ஏஷஸ்’ கிண்ணப் போட்டிகளிலாவது வெற்றிகளை ஈட்டி ‘ஏஷஸ்’ கிண்ணத்தைக் கைப்பற்றுவதன் மூலம் இழந்துள்ள மவுஸை சீர்படுத்திக் கொண்டு முன்னிலைக்கு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது. மாறாக, ‘ஏஷஸ்’ கிண்ணத்தையும் அவுஸ்திரேலியா இழக்குமாயின், அந்நாட்டு கிரிக்கெட் துறையில் பாரிய மாற்றங்கள் ஏற்படும் என்று எதிர்பார்க்க முடியும்.



## சூதாட்டப் புகார்; விசாரணை ஜனவரியில்...

ஜனவரி 6 ஆம் திகதியிலிருந்து 11 ஆம் திகதி வரை நடைபெறும் மேற்படி விசாரணைகளின் பின்னரே இவர்கள் குறித்தான இறுதித் தீர்மானம் எடுக்கப்படும். இவர்கள் குற்றம் புரிந்திருப்பது நிரூபிக்கப்பட்டால் இவர்களுக்கெதிராக, ஆயுட்கால கிரிக்கெட் தடை விதிக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

சூதாட்ட குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களான சல்மன் பட், மொஹமட் ஆமீர், மொஹமட் ஆசீப் ஆகிய மூன்று பேர் மீதான விசாரணைகள் அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மீதான விசாரணையை சர்வதேச கிரிக்கெட் சபையே நடத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்னிங்ஸில் 3 ஓட்டங்களை மாத்திரமே எடுத்த அணி

பாடசாலைகள் மட்டத்தில் 13 வயதிற்குக் கீழானோருக்கான போட்டியொன்றில் புஸ்ஸல்ல கந்த மஹா வித்தியாலய அணி சகல விக்கெட்களையும் இழந்து 3 ஓட்டங்களை மாத்திரமே பெற்று பாடசாலை கிரிக்கெட் சாதனைக்கு ஆளாகியுள்ளது.



பண்டாரவளை மகா வித்தியாலயம்-புஸ்ஸல்ல கந்த மஹா வித்தியாலயம் ஆகிய இரண்டு அணிகளுக்கிடையே பண்டாரவளையில் நடைபெற்ற மேற்படி போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பண்டாரவளை மகா வித்தியாலய அணி 46 ஓவர்களில் 3 விக்கெட்களை மாத்திரமே இழந்து 553 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய புஸ்ஸல்ல கந்த மகா வித்தியாலய அணி 4.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 3 ஓட்டங்களை மாத்திரமே மொத்த ஓட்டங்களாகப் பெற்றது.

இதன்படி, அந்த அணிக்கு இன்னிங்ஸ் வழங்கப்பட்டு மீண்டும் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அந்த அணி 31 ஓட்டங்களை மாத்திரமே எடுத்ததால் பண்டாரவளை மகா வித்தியாலய அணி இன்னிங்ஸாலும் 519 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது. இதற்கு முன்னர் எந்தவொரு பாடசாலை அணியும் இவ்வாறு 3 ஓட்டங்களை மாத்திரமே பெற்று போட்டியொன்றில் தோல்வியடைந்ததில்லை. இதுவும் ஒரு சாதனையாகவே அமைந்துள்ளது.

# பாகிஸ்தான் வீரர்கள் ஐந்து பேர் இல்லை



அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில், சூதாட்ட குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள பாகிஸ்தான் போட்டியாளர்கள் ஐந்து பேர் அந்த அணியில் இடம்பெற மாட்டார்கள் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

சல்மன் பட், ஆசிப், ஆமீர் ஆகிய மூன்று பேருக்கு எதிராக ஏற்கனவே சர்வதேச போட்டித் தடை உள்ள அதேவேளை, அவர்கள் உட்பட, அவுஸ்திரேலியாவில் சூதாட்டப் புகாருக்கு உள்ளான் அக்மல் மற்றும் இங்கிலாந்தில் சூதாட்டப் புகாருக்கு உள்ளான கனேரிய ஆகியோருமே இவ்வாறு உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாட முடியாதவாறு தடுக்கப்பட்டுள்ளவர்களாவர்.

உலகக் கிண்ணப் போட்டிகளின் போதும் புதிய சர்ச்சைகள் ஏற்பட்டு அணிக்கு மேலும் பாதிப்பு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவே இவர்களுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

# ஜேர்மனி வீரர் செம்பியன்





இம்முறை அபுதாபியில் நடைபெற்ற ‘ஃபொமியுலா 1’ இறுதிச்சுற்று கார் ஓட்டப் பந்தயத்தில் ஜேர்மனியைச் சேர்ந்த செபஸ்தியன் வெட்டல் வெற்றியீட்டி செம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளார்.

உலகில் பலரதும் எதிர்பார்ப்பைத் தூண்டும் கார் ஓட்டப்போட்டியாகவே ‘ஃபொமியுலா 1’ கார் ஓட்டப்போட்டி இருந்து வருகின்றது. இம்முறை மேற்படி போட்டியில் 19 சுற்றுக்களாக போட்டி நடைபெற்றது. 12 அணிகளின் சார்பாக, 24 போட்டியாளர்கள் கலந்து கொண்ட போட்டிகளின்போது, 55 சுற்றுக்கள் காரைச் செலுத்த வேண்டியிருந்தது. இந்த 55 சுற்றுக்களும் மொத்தமாக, 305 கி.மீற்றர் தூரத்தைக் கொண்டதாக இருந்தது. இதன்போது, ஜேர்மனி வீரர் 1 மணித்தியாலம் 39 நிமிடங்கள் 36.837 செக்கன்களில் குறித்த தூரத்தைக் கடந்து, 265 புள்ளிகளுடன் வெற்றி அடைந்தார். 23 வயதில் இவர் இந்த சாதனையை நிலைநாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளி வீரர்களைத் துயிலெழுப்புவதற்கான பாடல் போட்டி



விண்வெளிக்குச் செல்லும் வீரர்கள் ஆய்வுப் பணிகளுக்காக விண்வெளியில் இருக்கும்போது, அவர்களைத் துயில் எழுப்புவதற்கான பாடல் தேர்வுப் போட்டியொன்றை அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான 'நாஸா' அறிவித்திருந்தது.





இவ்வாறானதொரு பாடல் தேர்வுப் போட்டி அறிவிக்கப்பட்டமை இதுவே முதல்தடவையாகும். இதில், அதிகமானவர்களின் மனதை ஈர்க்கும் ஒரு நல்ல மெட்டு தெரிவு செய்யப்பட்டு, இந்த ஆண்டு இறுதியில் டிஸ்கவரி விண்கலத்தில் செல்லும் விண்வெளி வீரர்களுக்கு அந்தப் பாடல் ஒலிக்க விடப் படவுள்ளது.

இதுதவிர, அடுத்த ஆண்டில் எண்டீவர் விண்கலத்தில் விண் வெளிக்குச் செல்லும் வீரர்களுக்காகவும் புதிய மெட்டுக்களை உருவாக்கும்படி வளரும் இளம் இசையமைப்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர். இந்தப் போட்டிகள் நாடு தழுவிய அளவில் அறிவிக்கப்பட்டுள்ளன.




பொதுவாக, விண்வெளி வீரர்களைத் துயில் எழுப்புவதற்கான பாடல்களை விண்வெளிக் குழுவினரின் நண்பர்களும் உறவினர்களும் தேர்வு செய்வது வழக்கம். ஆனால், தற்போதைய 'துயில் எழுப்பும் பாடல்' தேர்வுப் போட்டி மூலம், முதல் முறையாக சாதாரண மக்களுக்கும் அந்த வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தது. பாடல் தெரிவுகளில் அதிகமானோரால் தெரிவாகும் இரு பாடல்கள் டிஸ்கவரி விண்கலத்தின் இறுதிப் பயணத்தில் அதன் விண்வெளி வீரர் குழுவுக்கு ஒலிக்க விடப்படும். மேலும், அடுத்த ஆண்டு பெப்ரவரி அளவில் எண்டீவர் விண்கலம் விண்வெளிக்குப் பயணிக்கவுள்ளது. ஆனால், அதில் வீரர்களுக்கு முற்றிலும் புதிதாக உருவாக்கப்படும் பாடலே இசைக்கப்படவுள்ளது.

எண்டீவர் கொமாண்டரான மார்க் கெல்லி இதுபற்றிக் கூறுகையில்; ''விண்வெளிப் பயணக் குழுவினர், அதிகாலை துயிலெழுப்பும் பாடலை மிகவும் ரசிப்பார்கள். விண்கலத்தில் எங்களுக்கு மிகச்சிறந்த 'ஸ்பீக்கர்' எல்லாம் கிடையாது. இந்நிலையில், பொதுமக்கள் எந்தப் பாடலைத் தெரிவு செய்யப்போகிறார்கள் என்று அறிய ஆவலாக இருக்கிறோம்''என்றார். இந்த பாடல் தேர்வுப் போட்டி தவிர, "Face in Space' என்ற போட்டியையும் நாஸா அறிவித்திருக்கிறது. அதன்படி, நாஸாவின் இணையத் தளத்துக்கு எவர் வேண்டுமானாலும் தங்களின் முகத்தை மட்டும் படமெடுத்து அனுப்பலாம். அது விண்வெளிக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

# பூமியில் விழும் எரிகற்கள்

அமெரிக்க ஹார்வர்ட் ஆய்வு மையத்தைச் சேர்ந்த, புகழ் பெற்ற வானியல் வல்லுனர் ஒருவர் பூமியில் விழும் எரிகற்களின் இயல்பு, தன்மை, வடிவம், நகர்வுகள் பற்றி பல ஆராய்ச்சிகளை நிகழ்த்தியிருக்கிறார். எரிகற்கள் நட்சத்திரங்களல்ல என்று அவர் கூறியுள்ளார். பூமிச்சூழலை நெருங்கும்போது, அதன் துரித வேகத்தால் உரசலுக்குள்ளாகி பற்றி எரியும் தன்மையை அவை கொண்டுள்ளன. ஆகவே, இவை எந்த விதத்திலும் நட்சத்திரங்களுடன் தொடர்புடையவை அல்ல என அவர் தெரிவித்துள்ளார்.

எரிகற்கள் இரவு நேரங்களில் வானில் நெருப்புப் பந்து போல் கணிசமான பிரகாசத்துடன் தோன்றும். இவற்றில் பெரும்பாலானவை தமது சுற்றுப்பாதையில் சூரியனைச் சுற்றி வருகின்றன. இவ்வாறு சுற்றிக் கொண்டிருக்கும் நிலையில், பூமி அவற்றின் பாதையில் தடையாகின்றபோது, எரிகற்கள் கொத்துக் கொத்தாக வளிமண்டலத்தில் பிரவேசிக்கும். அத்துடன், பல எரிகற்கள் ஒளிப்பொறிகளுடன் எரியும் தன்மை கொண்டவை.



மாலைப்பொழுதில் விழும் எரிகற்களைவிட, அதிகாலைப்பொழுதில் விழும் எரிகற்களின் எண்ணிக்கை நான்கு மடங்கு அதிகம்.

அத்துடன், நம் கண்ணுக்கு குறைந்தளவு எரிகற்களே தென்படுகின்றன. ஒருவர் சராசரியாக, ஆண்டுக்குப் பத்து எரிகற்களை ஒரு மணி நேரத்துக்குள் காணமுடியும். தினமும் 10 லட்சம் எரிகற்கள் பூமியை வந்தடைந்தபடி இருக்கின்றன. அவற்றில் நூற்றில் ஒன்றுதான் கண்ணுக்குப் புலப்படுவதாக இருக்கும். எரிகற்களின் வெளிச்சக்கீறல்கள் அரை நொடிப்பொழுதே காணக்கூடியதாக இருக்கும். அவை 100 கி.மீ உயரத்தில் வளிமண்டலத்தில் உருவாகும். 60 கி.மீ உயரத்தில் இருந்து எரிந்தபடி கீழிறங்கும்.

எரிகற்கள் சிறிய அளவில் திடப்பொருளாக இருக்கும். சில எரிகற்கள் பட்டாணி அளவிலும் இருக்கும். இவை வளிமண்டல மேற்பகுதியிலேயே எரிந்து சாம்பலாகி விடுகின்றன. அந்தவகையில், பூமியின் வளிமண்டலம்தான் எரிகற்களில் இருந்து நம்மைக் காக்கின்றது. இந்த வளிமண்டலம் இல்லையேல், எரிகற்கள் விழுந்து நமக்குப் பல்வேறு பாதிப்புகளையும் அழிவுகளையும் ஏற்படுத்தியிருக்கும்.



# அயல்கிரகங்களில் உயிரினங்கள் இருக்கின்றனவா?



நமது பால்வீதியில் மட்டும் 10,000 கோடி கிரகங்கள் இருக்கலாம் என்று அமெரிக்க விண் ஆராய்ச்சிக்குழு ஒன்றின் தலைவர் ஜெப்ரி மோர்சி தெரிவித்துள்ளார். இதில் வியாழன் போன்ற கிரகங்கள் 600 கோடி



இருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இன்றுவரை 230 அயல்கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டு உறுதி செய்யப்பட்டிருக்கின்றன. இதில், ஜெப்ரி மோர்சி தலைமையிலான குழுவினர் மட்டும் 150 கிரகங்களைக் கண்டுபிடித்திருக்கின்றனர். இதேவேளை, பூமியைப் போன்று 10 லட்சம் கிரகங்கள் இருக்கலாம் என்று டெப்ராபிசர் என்ற ஆராய்ச்சியாளர் கூறுகிறார்.

ஏற்கனவே, பூமியைப் போன்று நீர் இருக்கின்ற ஐந்து கிரகங்கள் கண்டறியப்பட்டுள்ளன. தவிர, 50 கிரகங்களில் உயிரினம் இருக்க வாய்ப்பிருப்பதாகவும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். அத்துடன், மெக்சிகோ அருகே விழுந்த ஒரு விண்கல்லில் சர்க்கரைப் படிவு காணப்பட்டிருப்பதால், உயிரினம் உள்ள அயல்கிரகம் ஒன்று இருக்கலாம் என்ற அனுமானிப்பு மேலும் உறுதியாகியுள்ளது.

இந்தச் சான்றுகளை வைத்து அயல்கிரகங்களில் மனிதர்களைப் போன்ற அறிவுமிக்க உயிரினங்கள் இருக்கின்றனவா? என்று கண்டறிவதற்கான திட்டத்தை அமெரிக்கா செயற்படுத்தி வருகின்றது. நமது பூமியின் கடலுக்கு அடியில் உள்ள எரிமலைகளிலும் வடதுருவப் பனிப்பிரதேசத்திலும் வறண்ட பாலைவனங்களிலும் நுண்ணுயிரிகள் இருப்பதைப் போல, விண்வெளியில் உள்ள அயல்கிரகங்களிலும் உயிரினங்கள் ஏற்கனவே தோன்றி வாழ்ந்து கொண்டிருப்பதற்கான வாய்ப்புகள் இருப்பதாக டெப்ராபிசர் தெரிவித்துள்ளார். பூமிக்கு அருகில் உள்ள அயல்கிரகங்களில் உயிரினங்கள் இருந்தால், அதை 10 வருடங்களுக்குள் கண்டுபிடித்துவிடலாம் என்று அவர் மேலும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உலகில் சஞ்சரிக்கும் தகவல்களை முத்து முத்தாகத் தொகுத்து வழங்கும் உன்னில் பிரசுரமான 'கைத்தொழிற் புரட்சியின் கதை' எனக்கு மிகவும் பிரயோசனமாக அமைந்தது. இதேபோன்று மேலும் பல அம்சங்களை அள்ளித் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**ஏ.ரிப்தி, தரம்-9$^{A}$,**
**அல்-ஹம்றா வித்., மருதமுனை.**

புதுப்புது விண்வெளித் தகவல்களைத் தந்து ஆச்சரியப்பட வைக்கின்றாய். 'கைத்தொழிற் புரட்சியின் கதை'யில் நிலக்கரி கைத்தொழில் புரட்சியும், போக்குவரத்துப் புரட்சியும் மிகவும் சிறப்பாக இருந்தன. 'அந்நிய ஆக்கிரமிப்பு' பற்றிய ஆக்கமும் ஏனைய ஆக்கங்களும் பாராட்டுக்குரியன.

**கே. பிரேமநேசன், தரம் - 9$^{B}$,**
**ஹோல்புறூக் த.ம.வித்.,**
**நுவரெலியா.**

மாணவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வரும் விஜயே! இவ்வாரம் நீ கொண்டு வந்த 'இராமாயணம்','விண்வெளித் தகவல்கள்', 'வரலாற்றிலிருந்து', 'வாரம் ஒரு நாடு',

# விஜய் வாசகர் மடல்



'விளையாட்டுச் செய்திகள்' மற்றும் 'கைத்தொழிற் புரட்சியின் கதை' போன்ற ஆக்கங்கள் எனக்கு மிகவும் பயன் தருவனவாக அமைந்தன.

**தே. துஷான், முதலாம் ஒழுங்கை,**
**கொழும்பு வீதி, அவிசாவளை.**

உலகின் மூலை முடுக்குகளில் நடைபெறும் புதுப்புதுத் தகவல்களை சுமந்து வந்து எம் அனைவருக்கும் நன்மை பயக்கின்றாய். 'புவியை ஒத்ததான கோள் கண்டுபிடிப்பு', 'பிள்ளைகளின் உரிமைகள் எவை?', 'கைத்தொழிற் புரட்சியின் கதை', 'மூலிகைக் காளானின் சிறப்பு அம்சங்கள்' போன்ற அறியாத பல விடயங்களைக் கற்றுக்கொண்டோம்.

**இஷ்கா இக்ரம், தரம்-8$^{D}$,**
**அல்-ஹம்றா ம.வித்., தர்கா நகர்.**

'டயஸ்போரா' பற்றிய தகவல் மிகவும் பிரயோசனமாக அமைந்தது. 'கைத்தொழிற் புரட்சியின் கதை' எனது கல்வி நடவடிக்கைகளுக்கு மிகவும் ஒத்துழைப்பாக இருந்தது. 'புவியை ஒத்த கோள் கண்டுபிடிப்பு' பற்றிய விண்வெளித் தகவல் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. மேலும் விஞ்ஞான ரீதியிலான தகவல்களை எதிர்பார்க்கின்றோம்.

**எஸ்.எம்.மலிக், தரம்-11,**
**கொடேகொடை**
**மு.வித்.,ஹெம்மாதகம.**

'கைத்தொழிற் புரட்சியின் கதை', தடையில்லாமல் தொடரும் 'கற்றலுக்கான ஆலோசனைகள்', 'பிள்ளைகளின் உரிமைகளை மதித்து ஒழுகுவோம்' போன்ற ஆக்கங்கள் எனக்கு மிகவும் பயனளித்தன.

**எம்.எஃப்.நிஸ்ரினா,**
**அல்-அக்ஷா மு.ம.வித்.,**
**எஹலியகொடை.**

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தேவைப்படும் விடயங்களாகக் கருதக்கூடிய 'அந்நிய ஆக்கிரமிப்புகள்', 'கைத்தொழிற் புரட்சியின் கதை', 'வங்கி முறையின் ஆரம்பம்' எனும் ஆக்கங்கள் எனக்கு பயனுடையதாக அமைந்தன. மேலும் பல விடயங்களை கற்றுத் தெரிந்துகொண்டேன்.

**அ.சேஸ்திரினி, தரம்-11,**
**பாக்கியம் தே.கல்., மாத்தளை.**

'கைத்தொழிற் புரட்சி' என்ற பகுதி எனது வரலாறு பாடத்திற்கு மிகவும் பயன் தந்தது. அதற்காக உனக்கு எனது நன்றிகள். மேலும் பல சுவாரஸ்யமான கதைகளை வரவேற்கின்றேன். உனது சிறப்பு மென்மேலும் வளர எனது வாழ்த்துக்கள்.

**ஆர்.நிரஞ்சன், தரம்-8$^{E}$,**
**இந்துக் கல்., கொழும்பு-04.**

**இந்த இதழில் (24.11.2010) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**
**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 01.12.2010.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**



**வாசகர் மடல்,**
**'விஜய்'**
**த.பெ.எண் 2037,**
**கொழும்பு.**



## வழி காட்டுங்கள் (1)



## பொருத்தமான விடையில் கோடிடுக (5)

*1. நைல்நதி எக்கண்டத்தில் அமைந்துள்ளது?*
அ) ஆசியா ஆ) ஆபிரிக்கா

*2. சிந்து சமவெளி மக்களின் எழுத்துமுறை எவ்வாறு அழைக்கப்படுகிறது?*
அ) சித்திர எழுத்து ஆ) கம்பெழுத்து

*3. ஈரான் நாட்டின் தேசிய மலர் எது?*
அ) சிவப்பு ரோஜா ஆ) தாமரை

## சரியான எண்ணிக்கையில் வட்டமிடுக (2)




## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 285 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
தி.நிகாஷன்,
மண்டான் கரணவாய் மேற்கு, கரவெட்டி.

**போட்டி: 02**
ஜெ.சஞ்சு, 56, உனம்புவ வீதி, கம்பளை.

**போட்டி: 03**
எஃப்.வுஸ்லா, 209, கல்பொக்கை, வெலிகாமம்.

**போட்டி: 04**
எம்.அம்மார் சியாட்,
ஏ 35/2, மேலூர், கன்னத்தோட்டை.

**போட்டி: 05**
எஃப்.ரமீஸா,
44/10, நைகலஹேன, யோனகபுர,
திக்குவல்லை.




**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.12.01 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 288**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

## இடைவெளியை நிரப்புக (4)

1. exp ..... (urt/ert)
2. mosqui ...... (to/toe)
3. ...... ratulation (cong/conk)
4. kilom ...... (etre/eter)

## A பகுதியிலுள்ள உருவை B பகுதியில் இனங்கண்டு X அடையாளமிடுக (3)




## அறிவுக்கு விருந்து 285 விடைகள்

**போட்டி: 01**
1. அப்பிள்கள் - 3
2. வாழைப்பழங்கள் - 4
3. திராட்சைப்பழங்கள் - 22 (ஒரு திராட்சைக்குலை)
4. பெயார்ஸ்கள் - 3
5. தோடம்பழங்கள் - 4

**போட்டி: 02**



**போட்டி: 03**

| | |
|---|---|
| eheps sheep | cudk duck |
| osertor rooster | woc cow |
| gip pig | rehos horse |
| atog goat | nichkec chicken |

**போட்டி: 04**
1. அஞ்சல் 2. புராணம்
3. நொறுக்குத் தீனி
4. சூழ்நிலை

**போட்டி: 05**
1. குதிரை - கனைக்கும்
2. கோழி - கொக்கரிக்கும்
3. பல்லி - சொல்லும்
4. ஆந்தை - அலறும்

**பாராட்டுப் பெறுவோர்:**

- எஃப்.ஆதிலா, கெலிஓயா.
- ஸகியா சனூசி, அக்குறனை.
- ஜே.லக்சன், மன்னார்.
- பாத்திமா சஹ்மினா, ஏறாவூர்-03.
- எச்.எஃப்.அஸ்லா, புத்தளம்.
- அ.வலீத், திருகோணமலை.
- சூ.விமலேசன், பருத்தித்துறை.
- அ.ஜோன், நாவற்கேணி.
- எஃப்.முஸ்னத், புத்தளம்.
- எம்.ரஷாத், ஹபுகஸ்தலாவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வீழ்ச்சியை நோக்கிய சூழ்ச்சி

காக்கைவன்னியன் கூறியதைக் கேட்டு ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தான் பிரகன்சா. ''காக்கைவன்னியா! உன் மூளையை மெச்சுகின்றேன். திட்டத்தை உடனடியாகவே செயற்படுத்த வேண்டும். அதற்கான ஒழுங்கை நல்லூரில் இருக்கும் நம் நண்பர்களுக்குத் தெரியப்படுத்து, தேவையான பொன், பணம் இந்தப் பையுள் இருக்கிறது. எடுத்துக்கொள். இவை மட்டுமல்ல; காரியம் நிறைவேறுமானால் இன்னமும் அள்ளி அள்ளி வழங்குவோம்'' என்றான் பறங்கி பிரகன்சா.

பிரகன்சா சென்றதும் செய்தி காக்கைவன்னியனின் நம்பிக்கைக்குரிய ஒற்றன் மூலம் அப்பாமுதலிக்குத் தெரியப்படுத்தப்பட்டது. செய்தி அறிந்த அப்பாமுதலி மிகுந்த சந்தோஷத்தில் திளைத்தான்.

அமைச்சன் அப்பாமுதலியின் வீட்டில் காக்கைவன்னியனின் ஆதரவாளர்களும் பறங்கியர் சிலரும் மறைந்திருந்தனர். அப்பாமுதலி தன் மகளின் தோழியை வரவழைத்தான். அவளும் வந்தாள், ''பெண்ணே உன்னை எதற்காக வரும்படி சொன்னேன் தெரியுமா? சொல்கிறேன் கவனமாகக் கேள். உனக்கு வேண்டிய பொன், நகைகள் என அனைத்தையும் கொடுப்பேன். வேண்டிய மட்டும் பொருளும் பணமும் கொடுப்பேன். எமக்காக மன்னனிடம் நீ சென்று பொய்யொன்று உரைக்க வேண்டும். அது என்னவென்றால், இன்றிரவு என் மகள் மன்னனைக் காண விரும்புகிறாள். நீங்கள் வரவேண்டும் மன்னவா'' என்று சொல்வதே. இவ்வாறு நீ சொல்வாயானால் என் மகள் இராணியாவாள். பரநிருபன் அரசனாவான். நீயோ உயர்ந்த இடத்தில் இருப்பாய்! சொல்லத் தவறினால் உன்னை உயிரோடு விடமாட்டேன். எமக்குப் பறங்கியரின் செல்வாக்கு இருக்கிறது. சங்கிலியைப் போல் தொடர்ந்து போர் செய்து எம்மினத்தைச் சாகடிக்கும். எண்ணம் சிறிதேனுமில்லை எம்மிடம். எனவே, மன்னன் சங்கிலியைக் கொல்லத்துடிக்கும் எமக்கு உதவி செய்'' என்றான்.

தோழி! மறுபேச்சுப் பேசவில்லை. அங்கிருந்து எப்படியும் போய் விடவேண்டும் என்ற நிலையில் அவள் இருந்தாள். அப்பாமுதலிக்கு நீங்கள் கூறியபடி செய்வேன் எனக் கூறிவிட்டு அங்கிருந்து அகன்றாள். அங்கிருந்து புறப்பட்ட தோழியானவள் தன் தோழியான அமைச்சர் அப்பாமுதலியின் மகளிடம் யாருக்கும் தெரியாமல் சென்றடைந்தாள். மனதில் இருந்தவற்றை வெளிக்கொணர முடியாமல் அவள் கண்களில் நீராக வெளிப்பட்டன. தோழியின் கண்களில் அன்றுதான் கண்ணீரைக் கண்ட அப்பாமுதலியின் மகள் அவள் கண்ணீரைத் துடைத்தபடியே, ''என்னருமைத் தோழியே! உனக்கு ஏற்பட்ட இன்னல்தான் என்ன? என்றும் எதற்கும் கலங்காத உன் கண்கள் இன்று கலங்கியது ஏன்? கூறுவாய்!''

''எப்படிச் சொல்வேன் என் உயிர்த்

# யோகாசனம் பயில்வோம்!

## உத்தித பத்மாசனம்



**செய்யும் முறை:**

இந்த ஆசனத்தை பத்மாசனம் செய்யத் தெரிந்தவர்கள் இலகுவாகச் செய்யலாம். ஏனையவர்கள் முதலில் பத்மாசனத்தைப் பழகிய பின்பே இதைச் செய்ய வேண்டும். கைப்புயங்களுக்குப் பலத்தினைத் தருவதால் கால்களை நீட்டியாவது இதைச் செய்ய வேண்டும். பிற்பாடு, பத்மாசனத்தை நன்கு பழகிய பின் முறைப்படி செய்யலாம். படத்தினை நன்கு கவனித்து செய்யவும்.

**பயன்கள்:**

தோள் புயம் பலம் பெறும் ஜீரண உறுப்புக்கள் நன்கு இயக்கப்பட்டு உரிய முறையில் செயற்படும். அஜீரணம், மலச்சிக்கல் என்பன தீரும். ஆஸ்துமா நோய் உள்ளவர்கள் நெஞ்சுக்கூடு விரிவடைவதனால் பூரண சுகம் பெறுவர். புஜ பலம் அதிகரிக்கும். (தொடரும்)

# சேற்றின் மகிமையை உணர்த்தும் திருவிழா

தென் கொரியாவில் வருடாந்தம் கோடைகாலத்தில் 'சேற்றுத் திருவிழா' ஒன்று கொண்டாடப்பட்டு வருகின்றது. தென்கொரியாவின் போர்யங் (Boryeong) என்னுமிடத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட டேச்சியோன் (Daechen) கடற்கரையில் கொட்டப்பட்டு அதில் குதித்து விளையாடி மகிழும் இந்தத் திருவிழா லட்சக்கணக்கானோரை க் கவர்ந்து வருகிறது. உயர்தர கனிமப்பொருள்களைக் கொண்டதெனக் கருதப்படும். இந்தச் சேற்றிலிருந்து அழகு சாதனப் பொருட்களும் தயாரிக்கப்படுகின்றன.

இத்திருவிழாக் காலத்தின் வார இறுதியில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் பெருமளவில் பங்கு கொள்கின்றனர். விசேடமாக, அமெரிக்க படைவீரர்கள் இதில் பங்கு கொள்வதில் மிகுந்த ஆர்வம் கொள்கின்றனர். வெளிநாட்டு உல்லாசப் பயணிகளைக் கவர்வதன் மூலம் இத்திருவிழா அதிக வருமானம் ஈட்டித்தரக் கூடியதாகவும் உள்ளது. இந்தச் சேற்றிலிருந்து 16 வெவ்வேறு வகையான அழகு சாதனத் தயாரிப்பு மூலப் பொருட்களை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

போர்யோங் சேற்றிலிருந்து தயாரிக்கப்படும் அழகுசாதனப் பொருட்கள் முற்றுமுழுதாக உயர்ரக கனிம, மருத்துவ சக்திகளைக் கொண்டவையாக உள்ளன. இவை சருமத்துக்கு மிக உபயோகமானவை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த உற்பத்திகளை உலக அளவில் விருத்தி செய்யும் நோக்கத்திலேயே போர்யோங் மக்கள் இந்தச் சேற்றுத் திருவிழாவைக் கொண்டாடுகின்றனர். மக்கள் இந்த சேற்றின் மகிமை பற்றியும் அதன் உற்பத்திகள் பற்றியும் அறிவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தும் வகையிலேயே வருடாந்தம் இத்திருவிழா கொண்டாடப்படுகின்றது.





**தோழி சொன்னதைக் கேட்டு அப்பாமுதலியில் மகள் ஆச்சரியப்பட்டாள். பின்னர், ''தோழி நீ கலங்காதே பொய்கூறி மன்னனை வரச்சொல்ல வேண்டாம். செந்தமிழர் காலம் காலமாக வாழும் எம் மண்ணை எம் பாட்டன் பாட்டி கூடிக்குலாவிய இந்த மண்ணை அந்நியருக்கு விட்டுக்கொடுப்பதா? நமக்கு நாடு முக்கியம்'' என்று கூறினாள்.**

# யாழ்.வரலாற்றில் சங்கிலி மன்னன்



வரலாற்றுத் தொடர்... 22

அரியாலையூர் சி.சிவதாசன்

தோழியே! உங்கள் தந்தையார் அந்த வஞ்சகப் பறங்கியரோடு சேர்ந்துவிட்டார். நம் சங்கிலி மன்னனை ஒழிக்கத் திட்டமும் வகுத்துள்ளார். அந்தச் சதிக்கு என்னை ஆயுதமாகப் பயன்படுத்தக் கட்டளை இட்டுள்ளார். என்னை மன்னனிடம் சென்று இன்றிரவு நீங்கள் வரச் சொன்னதாகக் கூறும்படி பயமுறுத்திக் கூறியுள்ளார். அப்படிக் கூறாது போனால் என்னைக் கொலை செய்வதாகப் பயமுறுத்தியும் உள்ளார்'' என்றாள்.

''தோழி நீ கலங்காதே! பொய் கூறி மன்னனை வரச் சொல்லாதே! இதெல்லாம் அந்தக் காக்கைவன்னியனின் சூழ்ச்சி. அவன் அடிக்கடி தந்தையிடம் வந்து போவதை நான் அறிவேன். அவன் கொழும்புத்துறைப் போரில் மன்னனுக்கு உதவ முன்வரவில்லை. மன்னனும் அவனை முழுமையாக நம்புகின்றார். அதனால், அவரிடம் அவனைப் பற்றி முழுமையாக எடுத்துச் சொல்ல யாரும் முன்வருவதில்லை. அந்தத் தீயவன்தான் அப்படியென்றால் என் தந்தையுமா? மன்னனுக்குத் துரோகம் நினைக்கிறார்? நஞ்சினை ஒத்த என் தந்தை சொன்னதைச் செய்யாதே! உன் இனத்துக்குத் துரோகி ஆகாதே! செந்தமிழர் காலம் காலமாக வாழும் எம்மண்ணை, நல்லூரான் ஆட்சி செய்யும் இந்த மண்ணை, எம் பாட்டன் பாட்டி கூடிக்குலாவிய இந்த மண்ணை, பைந்தமிழ்ப் பாவலன் பாடலிசைத்துப் பரிசாகப் பெற்ற இந்த மண்ணை. அந்தப் போர்த்துக்கேயப் பறங்கியருக்கு விட்டுக் கொடுப்பதா? அவன் ஆட்சியின் கீழ் நாம் அடங்கி வாழ்வதா? போ! உடனே போ! என் தந்தை என்ற தீயான் உன்னிடம் சொன்னவற்றை அப்படியே மன்னனிடம் சொல்! எமக்கு நாடு முக்கியம். அதனை ஆளும் மன்னன் முக்கியம். நன்றே செய்! அதை இன்றே செய்! அதுவே தமிழ்ப் பெண்ணான உன் கடமை'' என்றாள்.

அதுகேட்டு தோழி அங்கிருந்து புறப்பட்டுச் சென்றாள். அரண்மனைக்குப் போய் சங்கிலி மன்னனைச் சந்தித்து வணங்கினாள். பின்னர் விடயத்தைக் கூறலானாள். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையத்தின் வழியே வைரஸ் பரவுவதை தடுப்பதற்கான புதிய வழிமுறை முன்வைப்பு




**வைரஸ் தாக்கம் உள்ள கணினிகள் இணையத்தில் சேர்வது இந்தப் புதிய வழிமுறையின் மூலம் இயல்பாகவே தடுக்கப்படலாம்**



நமது கணினியில் வைரஸ் தாக்கம் ஏற்பட்டு விடுமோ? என்ற அச்ச உணர்வுடனேயே பலரும் கணினியைப் பயன்படுத்துவதுண்டு. இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு யோசனையை 'மைக்ரோசொஃப்ட்' நிறுவனத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். அண்மையில் ஜேர்மனியில் நடைபெற்ற இணைய சேவை பாதுகாப்பு (isse-international Security Solution Europe) தொடர்பான மாநாட்டில் கலந்து கொண்ட போதே, அவர் தனது யோசனையை முன் வைத்துள்ளார்.

இவரது பெயர் ஸ்கொட் சானி. மைக்ரோசொஃப்ட் நிறுவனத்தின் சார்பாகவே, இவர் இந்த தீர்வு யோசனையை ஆவணமாகக் கொண்டு வந்திருந்தார். அவர் முன் வைத்த யோசனை என்னவென்றால், எந்தவொரு கணினியும் வைரஸ் கொண்டதாகவோ அல்லது வேறு எந்தவொரு ஒவ்வாத புரோக்ராமைக் கொண்டதாகவோ இருக்குமாயின், அந்தக் கணினிக்கு இணையத்தில் இணைவதற்குத் தடை ஏற்படுத்த வேண்டும் என்பதே அவரது யோசனையாக இருந்தது.

இதனை எவ்வாறு செயற்படுத்த முடியும் என்பதையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை. அதாவது, இணையத்தில் சேர்வதற்கு முயற்சிக்கின்ற ஒவ்வொரு கணினியையும் இயல்பாகவே தகுதிகாண் சோதனைக்கு உட்படச்செய்ய வேண்டும். அதில் வைரஸ் கார்ட் உள்ளதா? ஃபயர் வோல் பயன்பாட்டில் இருக்குமா? வைரஸ் புரோக்ராம் உள்ளதா? போன்ற பரீட்சிப்புக்கள் இந்த சோதனையின் போது மேற்கொள்ளப்படும். அவ்வாறு அவை எதுவுமே இல்லையென்று அறியப்பட்டால் அந்தக் கணினிக்கு இணையத்தில் சேர்வதற்கான அனுமதி மறுக்கப்படும். அதாவது, இணையத்துடன் இணைவதற்கான வழி அடைக்கப்பட்டு விடும். ஆக! இவ்வாறு செய்வதன் மூலம் கணினியிலிருந்து இணையத்தில் வைரஸ் பரவுவது தடுக்கப்படும். அவ்வாறே, ஆரோக்கியமான






நிலையில் உள்ள கணினிக்கு புதிதாக வைரஸ் தாக்கம் ஏற்படுவதும் தவிர்க்கப்படும்.

இணைய சேவையை தொழிற்படுத்துகின்ற தொழில்நுட்ப வழிமுறையைக் கொண்டே, இவ்வாறான தடுப்புப் பணிகளை முன்னெடுக்க முடியும் அல்லது இணைய சேவையை வழங்குகின்ற நிறுவனங்களுக்கு இத்தகைய தடுப்புப் பணிகளை முன்னெடுக்க வேண்டியது கட்டாயமாக்கப்படும் வகையில் சட்டதிட்டங்கள் வகுக்கப்படல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




பிரான்ஸ், அவுஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளில் ஏற்கனவே மாற்று வழிகள் மூலம் தகுதியற்ற கணினிகளை இணைய சேவையில் சேர்வதைத் தடுக்கும் வழிமுறைகள் கைக்கொள்ளப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

ஜப்பானில் இணைய (இன்டர்நெட்) சேவையை வழங்குகின்ற 70 நிறுவனங்கள் ஒன்றிணைந்து பொது நிறுவனமொன்றை ஏற்படுத்தியுள்ளன. 'சைபர் கிளீன் சென்டர்' என்று இதற்குப் பெயரிடப்பட்டுள்ளது.வைரஸ் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தகுதியற்ற கணினிகள் இணையத்தில் சேர்வதற்கு முயற்சி செய்யுமாயின், அதனைத் தடுக்கக் கூடிய தொழில்நுட்ப வழிமுறைகளோ, சட்டதிட்டங்களோ அங்கு இல்லையாயினும் அவர்கள் குறித்த கணினியை பயன்படுத்துபவர் யார் என்பதைக் கண்டுபிடித்து, அவர்களுக்கு உரிய ஆலோசனைகளை வழங்கிக் குறித்த கணினியைத் திருத்துவதற்கான உதவிகளையும் செய்து, தேவையான மென்பொருட்களையும் வழங்குவதுடன் அவர்களது கணினியைத் தகுதியுடையதாக்குவதுடன், இணையத்தினூடே வைரஸ் பரவுவதைத் தடுப்பதில் இந்த நிறுவனம் பாடுபடுகின்றது.

ஆனால், இப்படியே ஒவ்வொருவரையும் தேடித் தேடி ஆலோசனை வழங்குவதன் மூலம் இதனைத் தடுப்பதைவிட, தொழில்நுட்ப ரீதியில் இதனை இயல்பாகவே தடுத்து விடக்கூடிய வழிமுறையையே முன்குறிப்பிட்ட மைக்ரோசொஃப்ட் நிறுவனத்தின் அதிகாரி தெரிவித்துள்ளார். எனவே, அந்த வழிமுறையைக் கைக்கொண்டால் இணையத்தில் வைரஸ் பரவுதலை முழுமையாகத் தடுத்து விட முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, நொவெம்பர் மாதம் 24 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday November 24, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org